பக்கங்கள்: 09

# காலைக்கதிர்

Kalaikkathir

விடியல் 10 வள்ளுவர் ஆண்டு 2056 மார்கழி 05 சனிக்கிழமை 20.12.2025 கதிர் 042

## இனி இது ரகசியம் அல்ல!



வலி. வடக்கு பிரதேச சபை தனது இந்தவருடத்திற்கானகடைசிமாதாந்தக் கூட்டத்தில் தையிட்டி விகாரை ஒரு சட்டவிரோதக் கட்டடம் என்று அதன் முன்பாகக் அறிவித்தல் ☞ 2

# எல்லை நிர்ணயத்தின் பின்னரே இனி மாகாண சபைத் தேர்தல்

## பிரதமர் நாடாளுமன்றத்தில் தெரிவிப்பு

மாகாண சபைகள் தேர்தல் சட்டத்திற்கமைய எல்லை நிர்ணயம் தொடர்பிலும், தேர்தல் தொகுதிகள் தொடர்பிலும் அறிக்கைகள் கிடைத்த பின்னர் அதற்கு நாடாளுமன்றத்தின் அனுமதி கிடைத்த பின்னர் மாகாண சபைத் தேர்தலை நடத்த முடியுமாக இருக்கும் என்று பிரதமர் ஹரினி தெரிவித்தார்.

எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாசவினால் செப்டம்பர் 24 நாடாளுமன்றத்தில் பிரதமரிடம் எழுப்பப்பட்ட கேள்விகளுக்கு நேற்று பிரதமர் பதிலளித்தார். அப்போது இதனைத் தெரிவித்தார். அவர் மேலும் தெரிவித்ததாவது:

''வளமான நாடு அழகான வாழ்க்கை'' என்ற கொள்கைப் பிரகடனத்தில் 194ஆவது பக்கத்தில் புதிய அரசமைப்பு வரைபு தயாரிக்கப்பட்டு, அது மக்களிடம் முன்வைக்கப்பட்டுகலந்துரையாடல்களுடன்தேவையான திருத்தங்களை மேற்கொண்டு சர்வஜன வாக்கெடுப்பில் நிறைவேற்றப்படும் என்று குறிப்பிடப்பட்டுள்ளது. இதன்படி செயற்படுவதே ஆளும்தரப்பின் எதிர்பார்ப்பாகும்.

இதன்படி இதற்கு முன்னர் அரசமைப்பு மறுசீரமைப்பு நடவடிக்கைகள் தொடர்பில் அமைக்கப்பட்ட குழுக்களின் அறிக்கை மற்றும் ஏனைய அரசமைப்பு மறுசீரமைப்பு தொடர்பான யோசனைகள் ஆராயப்படுவதுடன், அது தொடர்பான ஆரம்பகட்ட யோசனைப் பத்திரம் அமைச்சரவையில் முன்வைக்கப்படவுள்ளது.

எமது கொள்கைப் பிரகடனத்தில் 194ஆவது ☞ 6

# தரமற்ற தடுப்பூசி ஏற்றி இறந்த 2 பெண்களுக்கும் எங்கே நீதி?

## எதிர்க் கட்சித் தலைவர் கேள்வி

சுகாதாரத்துறையில் இருக்கும் ஊழல் மோசடிகளை வெளிப்படுத்திவரும் தேசிய வைத்தியசாலையின் பதில் பிரதிப் பணிப்பாளர் ருக்ஷான் பெல்லன பணி நீக்கப்பட்டுள்ளார். ஆனால் தரமற்ற மருந்துப் பொருட்களைக் கொண்டுவந்தவர்கள் இன்னும் பணியைத் தொடர்கின்றனர். தரமற்ற மருந்து ஏற்றியதால் உயிரிழந்துள்ள இரண்டு பெண்களுக்கும் ஆளும்தரப்பு எவ்வாறு நீதியை ☞ 6

# பொருளாதார இலக்குகளுக்கு பாதிப்பின்றியே பேரிடர் உதவி

## பிரதமர் ஹரினி தெரிவிப்பு

நாட்டின் பொருளாதார இலக்குகளுக்குப் பாதிப்பு இல்லாத வகையிலேயே பேரிடர்களால் பாதிக்கப்பட்டவர்களுக்கான உதவிகளை வழங்குதல் மற்றும் நாட்டை மீளக் கட்டியெழுப்பும் வேலைத் திட்டங்கள் முன்னெடுக்கப் படுகின்றதென பிரதமர் ஹரினி தெரிவித்தார்.

நாடாளுமன்றத்தில் நேற்றுநடைபெற்றபேரிடர் ☞ 6

# சிங்களவர்கள் அதிகம் வாழுமிடங்களில் தமிழ் மக்கள் புறக்கணிக்கப்படுகிறார்கள்

## ஜீவன் தொண்டமான் நாடாளுமன்றத்தில் ஆதங்கம்



நான் நாடாளுமன்றத்தில் ஒரு போதும் இனரீதியாகப் பேசியதில்லை. ஆனால் இப்போது சொல்கின்றேன், சிங்கள சமூகம் எங்கெல்லாம் அதிகமாக வாழ்கின்றதோ அங்கெல்லாம் பிரதேச செயலாளர்கள் தமிழ் மக்களைப் புறக்கணிக்கின்றார்கள். இதுதான் உண்மை. இது தொடர்பாக ஆளும்தரப்பு நடவடிக்கை எடுக்க வேண்டும்என இலங்கைதொழிலாளர் காங்கிரஸ்பொதுச்செயலாளர்ஜீவன் தொண்டமான் தெரிவித்தார்.

நாடாளுமன்றத்தில்நேற்றுவெள்ளிக் கிழமை இடம்பெற்ற பேரிடர் உதவிகளுக்கான குறை நிரப்பு பிரேரணை மீதான விவாதத்தில் கலந்துகொண்டு உரையாற்றுகையிலேயே இதனைத் தெரிவித்தார். அவர் மேலும் தெரிவித்ததாவது:

கடந்த வாரம் மலையகத்தைப் பிரதிநிதித்துவப்படுத்தும் சில சிவில் அமைப்புகள் ஒரு கலந்துரையாடலை நடத்தினார்கள். அவர்கள் ஒரு முன்மொழிவை தயாரித்துச் ☞ 2

# இழப்பீடு வழங்குவதில் பெருமளவு குறைப்பாடு

## சத்தியலிங்கம் எம்.பி. குத்திக்காட்டு

இயற்கை பேரழிவுக்கான இழப்பீடுகளை வழங்குவதில் பெரும் குறைபாடுகள் காணப்படுவதுடன் பாரிய அரசியலும் அதற்குள் செல்கிறது. 'பிரஜாசக்தி' என்ற திட்டத்தின் ஊடாக முழுமையாக அரசியல் மயப்படுத்தப்பட்ட பல விடயங்கள் எமது மாவட்டங்களில் நடைபெறுகின்றதென தமிழ் அரசுக் கட்சி உறுப்பினர் சத்தியலிங்கம் தெரிவித்தார்.

நாடாளுமன்றத்தில் நேற்று இடம்பெற்ற பேரிடர் உதவிகளுக்கான குறை நிரப்பு பிரேரணை மீதான விவாதத்தில் கலந்துகொண்டு உரையாற்றுகையிலேயே இதனைத் தெரிவித்தார். அவர் மேலும் தெரிவித்ததாவது:

இலங்கைக்கு இது முதல் இயற்கைப் பேரழிவு அல்ல. கடந்தகாலங்களில்பலஇயற்கைப்பேரழிவுகள்நடந்துள்ளன. வறட்சிப் பேரழிவுகள், கொள்ளைநோய்கள், மண் சரிவுகள், வெள்ளங்கள், சுனாமி கூட ஏற்பட்டிருக்கின்றது. இதனால் மக்கள் இறக்கின்றார்கள், காணாமல் போகின்றார்கள். வாழ்வாதரம் .உட்கட்டுமானம் அழிக்கப்படுகின்றது.

வன்னி தேர்தல் தொகுதியை எடுத்துக்கொண்டால் வாழ்வாதாரம், விவசாயம். விலங்கு வேளாண்மை அழிந்துள்ளன. மன்னார் மாவட்டத்தில் கிட்டத்தட்ட 1,5000 மாடுகள் அழிந்துள்ளன. 30,000க்கு மேற்பட்ட கோழிகள் காணாமல் போயுள்ளன.

10,000 ஆடுகள் இறந்துள்ளன. வவுனியா, முல்லைத்தீவு மாவட்டத்திலும் இதே நிலமை. இந்த ஒவ்வொரு மாவட்டத்திலும் 10,000 ஏக்கருக்கு மேற்பட்ட வயல் நிலங்கள் முற்றாக அழிந்துள்ளன. வீடுகள் ☞ 6

# பிரதி அமைச்சர் பிரதீப்பையும் சந்தித்துப் பேசினார் ஸ்டாலின்

இலங்கை மற்றும் தமிழ்நாட்டு அரசுகளின் உறவுகளை வலுப்படுத்தும் நோக்கில், பெருந்தோட்ட, சமூக உட்கட்டமைப்பு வசதிகள் பிரதியமைச்சர் பிரதீப் நேற்று சென்னையில் தமிழ்நாடு முதல்வர் ஸ்டாலினைச் சந்தித்து கலந்துரையாடியுள்ளார். இச்சந்திப்பில் சென்னையில் உள்ள இலங்கைக்கான பிரதி உயராணையர் வைத்தியர் கணேசநாதன் கேதீஸ்வரனும் கலந்துகொண்டார்.

இந்தச் சந்திப்பின் போது பேரிடர் காலத்தில் இலங்கைக்கு துரிதமாக உதவிய இந்திய ஆளும்தரப்புக்கும், பாதிக்கப்பட்ட மக்களுக்காக அத்தியாவசிய பொருட்களை அனுப்பி வைத்த தமிழ்நாடு ☞ 2



# ஊடக சுதந்திரத்தை முடக்கும் சம்பவங்கள் நடைபெறாதிருப்பதை உறுதிப்படுத்துங்கள்

## பத்திரிகை ஆசிரியர் சங்கம் ஆளும்தரப்பிடம் வலியுறுத்து

கருத்து வெளிப்பாட்டுச் சுதந்திரம் மற்றும் ஊடக சுதந்திரத்தை முடக்கும் வகையில் அண்மையில் பதிவான இரு சம்பவங்கள் தொடர்பில் கடுமையான கண்டனத்தை வெளிப்படுத்தியிருக்கும் இலங்கை பத்திரிகை ஆசிரியர் சங்கம், ஊடக சுதந்திரத்தை முடக்கும் வகையிலான சம்பவங்கள் எதிர்வருங்காலங்களில் நடைபெறாதிருப்பதை உறுதிப்படுத்துமாறு ஆளும்தரப்பிடம் வலியுறுத்தியுள்ளது. ☞ 2

# அதிக ஆபத்து மிக்க வலயங்களில் குடியிருப்பு வரவே முடியாத வகையில் புது சட்டம் வரும்

## அரசுத் தலைவர் அநுரகுமார அறிவிப்பு

2027ஆம் ஆண்டளவில் அதிக ஆபத்து மிக்க வலயத்தில் எந்தவொரு குடும்பமும் வாழ முடியாத வகையில்சட்டம்கொண்டுவரப்படும்.அதற்குமுன்னர் அபாய வலயங்களில் உள்ள மக்கள் அனைவரும் பாதுகாப்பான இடங்களில் குடியேற்றப்படுவார்கள் . அதேவேளை தித்வா புயலால் வீடுகளை இழந்த மற்றும் வீடுகளில் மீள குடியேற்ற முடியாத 17,648 குடும்பங்கள்இருக்கின்றன. அவர்கள்அனைவரையும் விரைவில் பாதுகாப்பான இடங்களில் மீளக் குடியேற்ற நடவடிக்கை எடுக்கப்படுமென அரசுத் தலைவர் அநுரகுமார தெரிவித்தார்.

நாடாளுமன்றத்தில் நேற்று நடைபெற்ற பேரிடர் உதவிகளுக்கான குறைநிரப்பு பிரேரணை மீதான விவாதத்தின் இறுதியில் பதிலளித்து ☞ 2

காலைக்கதிர்
Kalaikkathir

## இனி இது .....

பலகையைக் காட்சிப்படுத்தவேண்டும் என்ற தீர்மானத்தை எடுத்திருக்கிறது. அதனோடு சேர்த்து தையிட்டி விகாரதிபதியின் பதவி உயர்வுக்கு எதிர்ப்புத் தெரிவித்து நாளை ஞாயிற்றுக்கிழமை விகாரை முன்பாக ஒரு போராட்டத்தைநடத்துவதுஎன்றும்ஏகமனதாக ஒரு தீர்மானத்தை எடுத்திருந்தது.

பௌத்த மதத் தலைவர் ஒருவருக்குப் பதவி உயர்வு வழங்குவது உள்விவகாரம் அதில் ஏன் வலி. வடக்குப் பிரதேச சபை தலையிடுகிறது என்று மெல்ல விசாரித்துப் பார்த்தேன். அதற்குள் பல சிக்கல்கள் பூதாகரமாக வெளிப்பட்டன.

தையிட்டி விகாராதிபதிக்குப் பதவி உயர்வு அல்ல, அவர் புதிய பதவி ஒன்றுக்கு நியமிக்கப்படுகின்றார். இலங்கையில் உள்ள நான்கு பௌத்த உயர் பீடங்களில் ஒன்றான அமரபுர நிக்காயவின் வடபகுதிக்குரிய சங்கைநாயக்கர் பதவி அவருக்கு வழங்கப்படுகிறது. இது தொடர்பான நிகழ்வு கொழும்பு கலபாலுவலவில் உள்ள கோதம தபோவன ஆணை சபா மண்டபத்தில் நாளை நடைபெறவுள்ளது.

இந்த நிகழ்வில் வைத்தே தையிட்டி திஸ்ஸ விகாரையின் பிக்குவான ஜின்தோட்டை நந்தாராம தேரரிற்குப் புதிய நியமனம் வழங்கப்படவுள்ளது. இந்த நியமனம் குறித்த அழைப்பிதழில் அவருக்கு அமரபுர கல்யானவம்ச குழுவின் வட இலங்கையின் தலைமை சபாநாயகர் பதவி என்று குறிப்பிடப்பட்டாலும் அழைப்பிதழின் ஒரு இடத்தில் அவருக்கு வழங்கப்படுவது துணைத் தலைமை சபாநாயகர் பதவி என்றும் குறிப்பிடப்பட்டுள்ளது.

இந்தக் குழப்பம் ஒரு புறத்தில் இருந்தாலும், ஒரு சட்டவிரோத விகாரையைக் கட்டிய பிக்கு ஒருவருக்கு, பொது மக்களின் காணிகளை ஆக்கிரமித்த பிக்குவின் சட்டவிரோதச் செயல்களை அங்கீகரிக்கும் வகையில், அவரது சேவையைப் பாராட்டி வழங்கப்படும் இந்த நிகழ்விற்கு தற்போதைய ஆளும்தரப்பான தேசிய மக்கள் சக்தியின் புத்தசாசன சமயம் மற்றும் கலாசார அமைச்சர் ஹினிதும சுனில் செனவி தலைமை தாங்குகிறார்.

வேடிக்கை என்னவென்றால், தமது அமைச்சர் தலைமையில் நடக்கும் ஒரு நிகழ்விற்கு எதிர்ப்புத் தெரிவித்தும், தமது அமைச்சரே தமது கைகளால் வழங்கும் ஒரு நியமனத்திற்கு எதிர்ப்புத் தெரிவித்தும் வலி. வடக்கு பிரதேச சபையில் நிறைவேற்றப்பட்ட தீர்மானத்தை தேசிய மக்கள் சக்தியின் உறுப்பினர்களும் சேர்ந்தே ஆதரித்திருக்கிறார்கள். அந்தத் தீர்மானம் தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியினரால் சபைக்குக் கொண்டுவரப்பட்டது. திஸ்ஸ விகாரை விடயத்தில் கடந்த சில வருடங்களாகத் தொடர்ந்து எதிர்ப்புப் போராட்டங்களை நடத்தி வரும் கட்சி. ஒவ்வொரு பௌர்ணமி நாளிலும் (போயா தினங்கள்) விகாரை எதிரே போராட்டம் நடத்தும் கட்சி அது. அந்தக் கட்சி கொண்டு வந்த தீர்மானத்தை தமிழ் அரசுக் கட்சி, ஜனநாயகத் தமிழ்த் தேசியக் கூட்டணி ஆகிய கட்சிகள் ஆதரித்தன. அதில் ஒரு நியாயம் இருக்கிறது. ஆனால், தேசிய மக்கள் சக்தியினரும் அந்தத் தீர்மானத்தை ஆதரித்தனர். மட்டுமல்ல நாளை நடைபெறும் போராட்டத்தில் தாமும் கலந்துகொள்வோம் என்று தெரிவித்தே அந்தத் தீர்மானத்தை ஆதரித்தனர். அதற்குக் காரணம் அந்த விகாரை சட்டவிரோதமானது என்பது அவர்களுக்கும் நன்கு தெரியும் என்பதும், போராட்டத்திற்குத் தாம் எதிர்ப்பு என்பதாகக் காட்டினால் வரும் காலங்களில் அங்கு தாங்கள் அரசியல் செய்ய முடியாது என்பதுமேயாகும்.

தேசிய மக்கள் சக்தியின் இரட்டை வேடத்திற்கு இதுவொரு மிகச் சிறந்த உதாரணம். கட்சியின் மேலிடம் தெற்கில் சிங்கள பௌத்த மேலாதிக்கத்தை ஆதரித்து சிங்கள வாக்குகளைக் கவர முற்படும் அதேநேரத்தில் வடக்கில் தமிழர்களின் உணர்வுகளை மதிப்பதாகக் காட்டி தமிழ் வாக்குகளையும் திரட்டிக்கொள்ள இரட்டை வேடம் போடுகின்றது. இருந்தாலும் கட்சியின் மேலிடத்தால் இது விடயத்தில் வழங்கப்பட்ட அறிவுறுத்தலோ என்னவோ நாளைய போராட்டத்தில் தேசிய மக்கள் சக்தியினர் பங்கெடுக்கமாட்டார்கள் என்றே அறிய முடிகிறது.

ஆட்சிக்கு வந்ததும் திஸ்ஸ விகாரை விடயத்தில் 60 நாள்களுக்குள் தீர்வு தருவோம் என்று சொன்னவர்கள் தேசிய மக்கள் சக்தியினர். பெரிய ஆர்ப்பாட்டமாக, ஆரவாரமாக இது தொடர்பில் கூட்டங்களை நடத்தினார்கள், தீர்வைக் கண்டுவிட்டோம் இதோ செயற்படுத்தப் போகின்றோம் என்றெல்லாம் சொன்னார். ஆனால், இன்றோ அதே விடயத்தில் தெற்கில் சிங்களவர்களுக்கு ஒரு முகத்தையும் வடக்கில் தமிழர்களுக்கு ஒரு முகத்தையும் காட்டி மிகக் கேவலமான அரசியலைச் செய்ய முற்படுகிறார்கள்.

இந்த விடயத்தில் இதற்கு முன்னர் எந்தவொரு இலங்கைத் தேசியக் கட்சியும் இதுபோன்ற கீழ்த்தர அரசியலைச் செய்ததில்லை. வடக்கில் தமிழ் மக்களுக்குத் தரும் வாக்குறுதிகளைப் பற்றி தெற்கில் அமைதி காப்பதைச் செய்திருக்கிறார்கள். (மாகாண சபை அதிகாரங்கள் விடயத்தில் அநுரவும் தேசிய மக்கள் சக்தியினரும்கூட அப்படித்தான் நடந்தனர்) ஆனால், ஒரே விடயத்தில் இருவேறு விதமாக அவர்கள் நடந்ததில்லை.

திஸ்ஸ விகாரையில் தேரருக்குப் பதவி நியமனம் வழங்கும் நிகழ்வு எதிர்க் கட்சித் தலைவர் சஜித் பிரேமதாசவின் கூட்டுத் தலைமையிலும்தான் நடக்கிறது. ஆளும்தரப்பு எதிர்த்தரப்பு என்று எந்தத் தரப்பும் பௌத்தத்தை எதிர்க்கக்கூடாது என்பதில் சிங்களத் தரப்புக்கள் உறுதியாக இருக்கின்றன. ஆனால், தனிப்பட்ட அரசியல் நன்மைகளுக்காகத் தமிழர்கள்தான் கொழும்பு ஆளும்தரப்புக்களின் பின்னர் சோரம் போய்விடுகிறார்கள்.

**இடிமின்னல்**
(idiminnal@gmail.com)

## சிங்களவர்கள்....

### (முதலாம் பக்கத் தொடர்ச்சி)

சமர்ப்பித்தார்கள். புயல், வெள்ளத்தினால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு மறுவாழ்வு, தீர்வு தொடர்பான முன்மொழிவே அது. அதனை இந்த சபையில் நான் சமர்ப்பிக்கின்றேன்

இலங்கை தொழிலாளர் காங்கிரஸின் பொதுச் செயலாளராக எங்களால் முடிந்த உதவியாக எம்மால் சேகரிக்கப்பட்ட 60 இலட்சம் ரூபா பணத்தில் பாதிக்கப்பட்ட 2,137 குடும்பங்களுக்கு நாம் உதவி செய்துள்ளோம். இதற்கு உதவியவர்களுக்கு இந்த சபையில் நன்றி கூறுகின்றேன். எமது உதவி தொடர்பான கணக்கு விவரங்களையும் இந்தச் சபையில் சமர்ப்பிக்கின்றேன். நாம் செய்த இந்த உதவி போதாது.

கடந்த நாடாளுமன்ற அமர்வில் கொத்மலையில் நடந்த அசாதாரண சம்பவம் தொடர்பில் நான் உரையாற்றினேன். அதில் முக்கியமானதொரு பிரச்சினையாக அந்த பகுதியிலிருந்த பிரதேச செயலாளர் சரியான நடவடிக்கை எடுக்கவில்லையென்ற விடயத்தை முன்வைத்தேன். இது தொடர்பில் அரசு. அமைச்சர்கள் அல்லது நாடாளுமன்ற நடவடிக்கை எடுப்பார்கள் என நம்பினேன். ஆனால் நான் கூறியபோதிருந்ததைவிட இப்போது அந்தப் பிரச்சினை அதிகரித்துள்ளது . நேற்றைய தினம் (வியாழக் கிழமை) அதே பகுதியிலிருக்கின்ற மக்கள் சமூக வலைத்தளங்களில் வெளிப்படையாகவே அந்தப் பிரதேச செயலாளர் தம்மை முழுமையாக நிராகரிக்கிறார் என்று கூறியுள்ளார்கள்.

நான் எனது நாடாளுமன்ற நாட்களில் ஒரு உரையைக்கூட இனரீதியாக ஆற்றியதில்லை. ஆனால் கொத்மலை பிரதேசம் மட்டுமல்ல கொத்மலை, உடப்புசல்லாவ என சிங்கள சமூகம் எங்கு அதிகமாக வாழ்கின்றார்களோ அங்கெல்லாம் பிரதேச செயலாளர்கள் தமிழ் மக்களைப் புறக்கணிக்கின்றார்கள். இதுதான் உண்மை.

இது தொடர்பாக ஆளும்தரப்பு கட்டாயம் நடவடிக்கை எடுக்க வேண்டும். அன்று நன் அந்தக் குற்றச்சாட்டை வைத்தமைக்குக் காரணம் பாதிக்கப்பட்ட மக்கள் அந்தக் குற்றச்சாட்டை நாடாளுமன்றத்தில் முன்வைக்கச் சொன்னமைதான். நான் அந்தக் குற்றச்சாட்டை முன்வைத்ததால் இன்று அங்குள்ள தமிழ் சமூகம் ஒட்டு மொத்தமாக ஒதுக்கப்பட்டுள்ளது. இதே நிலைமைதான் அனைத்துப் பகுதிகளிலும் நடந்து கொண்டிருக்கின்றது.

இது அமைச்சரின் நோக்கம் கிடையாது .எனவே தயவு செய்து இது தொடர்பில் நடவடிக்கை எடுங்கள். எல்லோரும் மோசமானவர்கள் என நான் சொல்லவில்லை. ஒரு சிலரின் செயற்பாடுகளினால் ஆளும்தரப்புக்கு மட்டும் கெட்ட பெயர் கிடையாது. நாட்டுக்கே கெட்ட பெயர். அதே மாதிரி கிராம சேவகர்களைப் பார்த்தால் அவர்கள் நிறைய இடங்களுக்குப் பெயருக்கே செல்கின்றார்கள். பெயர்களை எடுக்கின்றார்கள். ஆனால் எதுவும் செய்ய மாட்டேன் என்கின்றார்கள்.

டிசெம்பர் 9 நுவரெலியா மாவட்டத்தில் அபிவிருத்திக் குழுக் கூட்டம் நடந்தது அதில் அரசுத் தலைவர் ஒன்றரை இலட்சம் மக்கள் இருக்கின்றனர் என்றும் அவர்களுக்கு 9 இலட்சம் பேர்ச் காணி தேவைப்படுவதாகவும் கூறியிருந்தார். அப்படிப் பார்த்தால் ஒரு குடும்பத்துக்கு 6 பேர்ச் காணிதான். நாடாளுமன்ற உறுப்பினர் திகாம்பரம் இருக்கும்போது 7 பேர்ச் காணி என சட்டம் கொண்டுவரப்பட்டது. நாங்கள் இருக்கும்போது 10 பேர்ச் காணி எனச் சட்டம் கொண்டு வரப்பட்டது. இப்போது 6 பேர்ச் எனப்படுகின்றது எனவே இது தொடர்பில் தனது நிலைப்பாடு என்னவென அரசுத் தலைவர் இந்த சபையில் தெளிவுபடுத்தியேயாக வேண்டும்.

அதேவேளை, சந்தாப் பணத்தில் நான் உதவி வழங்குவதாகக் கூறினார்கள். நாமல் ராஜபக்சவோடு நான் சென்ற போது அவருடன் கூட்டு சேர்ந்து விட்டதாக கூறினார்கள். எல்லோரும் சந்தாப் பணம் வாங்குகின்றார்கள். எத்தனைபேர் கணக்கு வழக்கை நாடாளுமன்றத்தில் சமர்ப்பித்துள்ளார்கள்? ஆனால் நான் சமர்ப்பித்துள்ளேன். நான் அனைத்துக் கட்சித் தலைவர்களிடமும் நுவரெலியா மாவட்டம் மோசமாக பாதிக்கப்பட்டுள்ளது, முடிந்த உதவிகளை செய்யுங்கள் எனக்கூறினேன். எனக்கு ஆளும் கட்சியா எதிர்கட்சியா, சிவில் அமைப்புக்களா என்ற பிரச்சினை கிடையாது. அந்த வகையில்தான் நாமல் ராஜபக்ச அங்கு வந்து உதவிகளை வழங்கினார் -என்றார்.

## பிரதி....

### (முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அரசுக்கும் இந்திய வம்சாவளி மலையக மக்கள் சார்பில் பிரதியமைச்சர் தனது நன்றியைத் தெரிவித்தார்.

தமிழ்நாடு ஆட்சிக் கூட்டணியில் பங்காளியான விடுதலைச் சிறுத்தைகள் கட்சியின் தலைவர் திருமாவளவன் ஏற்பாட்டில் தமிழ்த் தேசியப் பசுமை இயக்கத்தின் துணையோடு தமிழ்த் தேசிய மக்கள் மக்கள் முன்னணியினர் தமிழ்நாடு முதலமைச்சர் ஸ்டாலினைச் சந்தித்துப் பேசிய ஒரு நாளின் பின்னர் இந்தச் சந்திப்பு இடம்பெற்றுள்ளது.

மலையக மாணவர்களுக்கு தமிழ்நாட்டில் உயர்கல்வி வாய்ப்புகளை வழங்குவது தொடர்பிலும் இந்தச் சந்திப்பில் முக்கியமாக ஆலோசிக்கப்பட்டது. மலையக மக்களின் கலை, கலாசாரம் மற்றும் கல்வி அபிவிருத்திக்கு தொடர்ந்து தமிழ்நாடு அரசு ஒத்துழைப்பு நல்கும் என முதல்வர் உறுதியளித்தார்.

நவம்பர் 27 வீசிய தித்வா புயல், வெள்ளம் மற்றும் மண்சரிவுகளால் மலையகம் உட்பட 17 மாவட்டங்கள் பாதிக்கப்பட்டன. பாதிக்கப்பட்ட மக்களுக்கு உதவிகளை வழங்கவும், அவர்களின் அடுத்த கட்ட நகர்வுக்காக தமிழ்நாடு அரசின் குறுகிய கால மற்றும் நீண்டகால ஒத்துழைப்புகள் குறித்தும் விரிவாகக் கலந்துரையாடப்பட்டது.

மலையக மக்களுக்காக இலங்கை ஆளும்தரப்பு முன்னெடுத்துள்ள அபிவிருத்தி மற்றும் பொருளாதாரச் செயற்பாடுகள் குறித்து தமிழக முதல்வருக்கு விளக்கமளிக்கப்பட்டது. சபரிமலை ஐயப்ப யாத்திரையை புனித யாத்திரையாக இலங்கை ஆளும்தரப்பு பிரகடனப்படுத்தியமைக்காக தமிழ்நாடு முதல்வர் இலங்கை ஆளும்தரப்பிற்குத் தனது பாராட்டுகளைத் தெரிவித்தார்

## ஊடக ....

### (முதலாம் பக்கத் தொடர்ச்சி)

சங்கம் இது தொடர்பில் விடுத்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:

கருத்து வெளிப்பாட்டுச் சுதந்திரம் மற்றும் ஊடகசுதந்திரத்தின் மீது எதிர்மறைத் தாக்கத்தை ஏற்படுத்தக்கூடிய விதமாக அண்மையில் பதிவான இரு சம்பவங்கள் தொடர்பில் எமது தீவிர கரிசனையை வெளிப்படுத்துகின்றோம்.

முதலாவது சம்பவம் கடந்த நவம்பர் 19 'அருண' பத்திரிகையில் வெளியான ஒரு செய்தி போலியானது எனக்கூறி, அது குறித்து வாக்குமூலம் பெறுவதற்காக அப்பத்திரிகையின் ஆசிரியர் குற்றப் புலனாய்வுப் பிரிவினரால் குற்றப் புலனாய்வுத் திணைக்களத்துக்கு வரவழைக்கப்பட்டார்.

இருப்பினும் இது குறித்து அவருக்கு குற்றப் புலனாய்வுப் பிரிவினரால் அனுப்பிவைக்கப்பட்ட கடிதத்தில், இந்த முறைப்பாட்டை அளித்தது யார் என்பது உள்ளிட்ட அடிப்படை விடயங்கள் உள்வாங்கப்பட்டிருக்கவில்லை.

அதேபோன்று இரண்டாவது சம்பவம், அரசுத்தலைவரை அவமதிக்கும் வகையிலான கருத்துக்களை வெளியிடுவோருக்கு எதிராக நடவடிக்கை எடுக்குமாறு தான் பொலிஸாருக்கு அறிவுறுத்தியிருக்கிறார் என்று பிரதியமைச்சர் சுனில் வட்டகலவினால் கூறப்பட்ட கருத்தாகும். இது, பேரிடர் சூழ்நிலையில் பிறப்பிக்கப்படும் அவசரகால உத்தரவு, கருத்து வெளிப்பாட்டுச் சுதந்திரத்தை முடக்குவதற்காகப் பயன்படுத்தப்படமாட்டாது என அரசுத் தலைவரால் வழங்கப்பட்ட உத்தரவாதத்துக்கு முற்றிலும் முரணானதாகும்.

பிரதியமைச்சரின் இந்தக் கருத்தானது ஊடக நிறுவனங்களுக்கும், ஊடகவியலாளர்களுக்கும் எதிராக அவசரகால வழிகாட்டல்களின் கீழ் குற்றவியல் நடவடிக்கைளை எடுக்கலாம் என்ற மிகப்பாரதூரமான கருத்தை பொலிஸார் மத்தியில் விதைக்கும் வகையில் அமைந்திருக்கின்றது.

இவ்விரு சம்பவங்களையும் நாம் வன்மையாகக் கண்டிப்பதுடன், நாட்டில் ஊடக சுதந்திரத்தை முடக்கும் வகையிலான இவ்வாறான சம்பவங்கள் எதிர்வருங்காலங்களில் நடைபெறாதிருப்பதை உறுதிப்படுத்துமாறு ஆளும்தரப்பிடம் வலியுறுத்துகின்றோம் - என்றுள்ளது.

## அதிக ஆபத்து....

### (முதலாம் பக்கத் தொடர்ச்சி)

உரையாற்றும்போதே இதனைத் தெரிவித்தார். அவர் மேலும் தெரிவித்ததாவது:

ஏற்பட்டுள்ள பேரிடர் நிலைமையில் குறைநிரப்பு பிரேரணை அவசியம் என்பதனை நாடாளுமன்றத்தில் அனைவரும் ஏற்றுக்கொண்டனர். இந்நிலையில் இந்த 500 பில்லியன் ரூபா நிதி ஒதுக்கீடு மூலம் ஏப்ரல் மாதமளவில் பொருளாதாரம் வீழ்ந்துவிடும் என்று சிலர் கூறினர். ஆனால் நாங்கள் மிகவும் முறையாக நிதி முகாமைத்துவம் மற்றும் இலக்குகளுடன் செயற்படும் ஆளும்தரப்பாகும்.

நாங்கள் பொருளாதார விடயத்தில் கடந்த ஒரு வருட காலத்தில் சிறப்பாகச் செயற்பட்டுள்ளோம். கடந்த காலங்களில் திறைசேரி மறையான பெறுமானத்திலே இருந்தது. ஆனால் நாங்கள் 1,202 பில்லியன் ரூபா வரையில் அதிகரித்துள்ளோம்.

இந்நிலையில் தற்போது ஏற்பட்டுள்ள நிலமை பொருளாதாரத்திற்கும் மற்றும் மக்களின் இயல்பு வாழ்க்கைக்கும் பெரும் தாக்கமாகும். நாங்கள் வீழ்ந்திருந்த நாட்டை கட்டம் கட்டமாக முன் கொண்டுவந்திருந்த நிலையிலேயே இந்தப் பேரிடர் நிலமை ஏற்பட்டுள்ளது. இந்த நேரத்தில் எங்களிடமிருந்த 1.2 ரில்லியன் ரூபா இருப்பை மக்களுக்காக பயன்படுத்த வேண்டியுள்ளது.

பேரிடர் நிலமையில் பாதிக்கப்பட்டுள்ள மக்களுக்கு வீடுகளுக்குத் திரும்பும் வகையில் வீடுகளை சுத்தம் செய்ய 25,000 ரூபா வழங்கப்படுகின்றது. இதில் குறைபாடுகள் இருக்கலாம். இதற்காக அரச பொறிமுறை உள்ளது. அரச அதிகாரிகள் அது தொடர்பான நடவடிக்கைகளை முன்னெடுப்பர். அதனை அரசியல்வாதிகள் செய்வதில்லை. கிராம சேவர்களுக்கு இதில் பெரும் பங்குள்ளது.

அவர்கள் வழங்கப்படவேண்டியவர்களை தெரிவு செய்யும்போது அதற்காக சிறிது காலம் எடுக்கும். பொருட்களைக் கொள்வனவு செய்வதற்காக 50,000 ரூபா கொடுப்பனவு வழங்குவதில் இன்னும் சில முறைமைகள் உள்ளன.

அத்துடன் 6,228 வீடுகள் முழுமையாகச் சேதமடைந்துள்ளன. 4,543 வீடுகள் பகுதியளவில் சேதமடைந்துள்ளன. அந்த வீடுகளுக்கு போக முடியாது என்று தேசிய கட்டட ஆராய்ச்சி நிறுவனம் அறிவித்துள்ளது. அத்துடன் வீடுகள் சேதமடையாதபோதும் அந்த வீடுகள் ஆபத்தில் இருப்பதாக தேசிய கட்டட ஆராய்ச்சி நிறுவனம் அறிவித்துள்ள வீடுகளும் உள்ளன.

இவ்வாறாக மொத்தமாக 17,648 வீடுகளுக்கு மக்கள் திரும்ப முடியாது. முதற்கட்டமாக அந்த வீடுகளுக்கு மூன்று மாதங்களுக்கு 50,000 ரூபா கொடுப்பனவை வழங்குவோம். ஜனவரி மாதம் முதல் அதனை வழங்குவோம்.

அதேபோன்று முகாம்களில் இருக்கும் மக்கள் படும் கஸ்டங்களை அறிவோம். அவர்களுக்கு வாடகை வீடுகளுக்குச் செல்வதற்காக மாதாந்தம் 25,000 ரூபாவை வழங்குவோம்.

பாதிக்கப்பட்ட விவசாயத்துறை தொடர்பில் நாங்கள் அவதானம் செலுத்தியுள்ளோம். இதன்படி நெல், சோளம், பயறு போன்ற தானியங்கள் பயிரிடுபவர்களுக்கு கெக்டேயருக்கு 1,50,000 ரூபா கொடுப்பனவை வழங்குவோம். அத்துடன் ஏனைய பயிர் செய்கைகளுக்கு தேவையான இழப்பீட்டையும் வழங்குவதற்கு நடவடிக்கை எடுப்போம்.

அதேபோன்று கால்நடை பண்ணையாளர்கள் தொடர்பிலும் அவதானம்

தொடர்ச்சி 6ம் பக்கம்....


JDr
JDR CARE HOME
&
MEDICALS
முத்த பிரஜைகளுக்கான
பூரண வசதிகளுடனான
பராமரிப்பு
FACILITIES
Medical Care
24×7 Nursing Care
Adjustable Hospital Beds
AC / Non AC rooms
Attached Bathroom
Laundry
Physiotherapy
Speech therapy
NG care
BOOK NOW
0701348384
46,Brodie Lane,
Jaffna

# நமது பார்வை

உண்மை - நேர்மை - பக்கம் சாராமை

ஆசிரியபீடம்: இல.551 A, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்
தொலைபேசி - 021 222 3000
மின்னஞ்சல் - kalaikkathirnews@gmail.com
இணையம் - onlinekathir.com

## கவனிக்கப்படாத சைபர் அபாயம்

இணைய வழித் தாக்குதல்கள் பற்றிய அச்சம் உலகம் முழுவதும் அதிகமாக பேசப்பட்டு வரும் இக்காலத்தில், நிழ்நிலையற்ற (offline) வழிகளால் பரவும் சைபர் தாக்குதல்கள் குறித்து நாம் போதிய கவனம் செலுத்தாமல் இருப்பது ஆபத்தான அலட்சியமாக மாறி வருகிறது. 2025 ஆம் ஆண்டின் மூன்றாம் காலாண்டில் மட்டும் இலங்கையில் 39 இலட்சத்துக்கும் அதிகமான உள்ளக (local) 'மல்வேர்' தாக்குதல்கள் பதிவாகியுள்ளன என்ற உலகளாவிய சைபர் பாதுகாப்பு நிறுவனம் காஸ்பர்ஸ்கியின் தகவல், நமது டிஜிட்டல் பாதுகாப்பு அமைப்பில் இருக்கும் ஒரு அடிப்படை பலவீனத்தை வெளிப்படுத்துகிறது.

இந்த தாக்குதல்களில் சுமார் 23.2 சதவீத பயனர்கள் பாதிக்கப்பட்டுள்ளனர். இதன் மூலம், நிகழ்நிலையற்ற ஊடகங்கள் வழியாகப் பரவும் 'மல்வேர்' அபாயத்தில் இலங்கை உலகளவில் 53ஆவது இடத்தில் இருப்பதாகக் குறிப்பிடப்படுகிறது. இணையம் வழியாக நடைபெறும் தாக்குதல்களைக் காட்டிலும், இந்த வகை தாக்குதல்கள் பென்டிரைவ், சிடி, டிவிடி போன்ற நீக்கக்கூடிய சேமிப்பு சாதனங்கள் மூலமாகவே அதிகம் பரவுகின்றன. இது தொழில்நுட்ப வளர்ச்சியின் வேகத்தில், பழைய நடைமுறைகள் இன்னும் நம்மிடம் வேரூன்றியிருப்பதை உணர்த்துகிறது.

### ஆபத்துக்கான திறந்த கதவு

மேகக் கணினி (cloud computer) சேவைகள், நிகழ்நிலை ஆவண பகிர்வு, மின்னணு நிர்வாகம் என இலங்கை வேகமாக டிஜிட்டல் மயமாகி வரும் நிலையில், இன்னும் பல தனிநபர்களும் நிறுவனங்களும் தரவுகளைப் பகிர பென்டிரைவ் போன்ற சாதனங்களை நம்பிக்கையுடன் பயன்படுத்தி வருகின்றனர். பாடசாலைகள், அரச அலுவலகங்கள், சிறு நிறுவனங்கள் முதல் பெரிய நிறுவனங்கள் வரை இந்த நடைமுறை பரவலாகக் காணப்படுகிறது. ஆனால், இதுவே 'மல்வேர்' பரவுவதற்கான முக்கிய வாயிலாக மாறியுள்ளது.

'வோர்ம்'கள், கோப்பு 'வைரஸ்'கள் போன்றவை இணைய இணைப்பு இல்லாமலேயே சாதனத்திலிருந்து சாதனத்துக்கு பரவி, கணினி அமைப்புகளை பாதிக்கின்றன. இதன் விளைவாக தரவிழப்பு, அமைப்பு செயலிழப்பு, சில சந்தர்ப்பங்களில் முக்கிய தகவல் உட்சுரண்டல் போன்ற கடுமையான விளைவுகள் ஏற்படுகின்றன. இதை ஒரு தனிநபரின் பிரச்சினையாக மட்டும் பார்க்க முடியாது; இது நிறுவனங்களின் உற்பத்தித் திறன், அரசின் நிர்வாக செயல்திறன், இறுதியில் தேசிய பாதுகாப்பு வரை தாக்கம் செலுத்தக்கூடிய விடயமாகும்.

### சட்டமும் தொழில்நுட்பமும்

'காஸ்பர்ஸ்கி' கணினி 'அன்டி வைரஸ்' நிறுவனத்தின் ஆசிய பசிபிக் பிராந்திய முகாமைத்துவ இயக்குநர் அட்ரியன் ஹியா, இணையத் தாக்குதல்கள் மட்டுமன்றி உள்ளகத் தாக்குதல்களையும் சம அளவில் கவனிக்க வேண்டியதன் அவசியத்தை வலியுறுத்தியுள்ளார். பல அடுக்குகளைக் கொண்ட பாதுகாப்பு நடைமுறைகள் — வைரஸ் தடுப்பு மென்பொருள், தீச்சுவர் (firewall), சாதனக் கட்டுப்பாடு போன்றவை — அவசியம் என அவர் சுட்டிக்காட்டுகிறார். இது தனியார் நிறுவனங்களுக்கு மட்டுமல்ல, அரசுத் துறைகளுக்கும் பொருந்தும் அறிவுரையாகும்.

இத்தகைய சூழலில், ஐக்கிய நாடுகள் சபையின் 'சைபர்' குற்றங்கள் தொடர்பான உடன்படிக்கையை உறுதிப்படுத்துவது குறித்து இலங்கை கணினி அவசரத் தயார்நிலை குழு (CERT) சமீபத்தில் நடத்திய கலந்துரையாடல் முக்கியத்துவம் பெறுகிறது. இதனுடன் இணைந்து, 2025—2029 காலப்பகுதியுக்கான தேசிய சைபர் பாதுகாப்பு மூலோபாயம் அங்கீகரிக்கப்பட்டிருப்பதும் ஒரு நேர்மறை முன்னேற்றமாகும். ஆனால், சட்டங்களும் கொள்கைகளும் நடைமுறைப் பாதுகாப்பாக மாற வேண்டுமானால், அவற்றை செயல்படுத்தும் விழிப்புணர்வும் கட்டுப்பாடுகளும் சம அளவில் வளர வேண்டும்.

### எச்சரிக்கை மணி

உலகின் மிக அதிக அபாயம் கொண்ட நாடுகளான துர்க்மெனிஸ்தான், தஜிகிஸ்தான் போன்ற இடங்களில் 30 சதவீதத்துக்கு மேல் தொற்று விகிதம் காணப்படும் நிலையில், இலங்கை அதைவிட குறைவாக இருப்பது ஆறுதலளிக்கும் தகவலாகத் தோன்றலாம். ஆனால், 39 இலட்சம் தாக்குதல்கள் என்ற எண்ணிக்கை எச்சரிக்கை மணியாகவே கருதப்பட வேண்டும். மேலும், 2025 ஆம் ஆண்டின் முதல் காலாண்டில் மட்டும் விண்டோஸ் இயக்கி குறைபாடுகளை குறிவைத்த தாக்குதல்கள் 25 சதவீதம் அதிகரித்துள்ளமை, தாக்குதலாளர்கள் நாளுக்கு நாள் நுணுக்கமாகி வருவதை வெளிப்படுத்துகிறது.

இலங்கை தனது டிஜிட்டல் காலடித்தடத்தை விரிவுபடுத்திக் கொண்டிருக்கும் இந்நேரத்தில், அடிப்படை வைரஸ் தடுப்பு மென்பொருள் போதுமானது என்ற எண்ணத்தை கைவிட வேண்டிய தருணம் இது. சாதன மேலாண்மை கொள்கைகள், ஊழியர் பயிற்சி, பாதுகாப்பான தரவு பகிர்வு நடைமுறைகள் ஆகியவை கட்டாயமாக்கப்பட வேண்டும். குறிப்பாக பென்டிரைவ் போன்ற அணையமற்ற ஊடகங்களின் பயன்பாட்டை கட்டுப்படுத்துவதும், அவற்றை பரிசோதனை செய்யும் முறைகளை நடைமுறைப்படுத்துவதும் அவசரத் தேவையாக உள்ளது.

சைபர் பாதுகாப்பு என்பது தொழில்நுட்பப் பிரச்சினை மட்டும் அல்ல; அது ஒழுங்குமுறை, பழக்கவழக்கம், பொறுப்பு ஆகியவற்றின் கூட்டுச் சேர்க்கை. இன்று நாம் எடுக்கும் முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளே, நாளைய டிஜிட்டல் இலங்கையின் பாதுகாப்பை நிர்ணயிக்கும். அதனை மறந்தால், இணையம் இல்லாத இடத்திலிருந்தும் அபாயம் வந்து கதவைத் தட்டும்.

# இந்திய உயராணையரோடு நீதிபதிகள் குழாம் சந்திப்பு

அண்மையில் இந்திய உச்ச நீதிமன்றம் மற்றும் போபால் தேசிய நீதித்துறை அக்காடமி என்பவற்றின் ஏற்பாட்டில் இலங்கை உயர் நீதிமன்றத்தின் 10 மூத்த நீதிபதிகளுக்கான அறிவுப் பரிமாற்றம் மற்றும் பரஸ்பரத் தொடர்பு பட்டறையொன்று இந்தியாவில் நடைபெற்றது.

அதில் பங்கேற்ற மூத்த நீதிபதிகள் தமது அனுபவங்கள் மற்றும் கற்றல்கள் தொடர்பில் இலங்கைக்கான இந்திய உயராணையர் சந்தோஷ் ஜாவிடம் பகிர்ந்துகொண்டனர்.

இந்திய உச்ச நீதிமன்றம் (புதுடில்லி) மற்றும் தேசிய நீதித்துறை அகடமி, போபால் என்பன இணைந்து டிசெம்பர் 8 முதல் 12 வரை இலங்கை உயர் நீதிமன்றத்தின் 10 மூத்த நீதிபதிகளுக்கான அறிவுப் பரிமாற்றம் மற்றும் பரஸ்பரத் தொடர்பு பட்டறையொன்றை நடத்தியது. இப்பட்டறையில் கலந்துகொண்ட இலங்கையின் மூத்த நீதிபதிகள் குழாமுக்கு பிரதம நீதியரசர் ப்ரீத்தி பத்மன் சூரசேன தலைமைதாங்கினார்.

அதனைத் தொடர்ந்து வியாழக்கிழமை (18) இலங்கை உயர்நீதிமன்றத்தில் நடைபெற்ற விளக்கமளிப்புச் சந்திப்பின்போது, இந்தப் பட்டறையின் அனுபவங்கள் மற்றும் முக்கிய கற்றல்கள் தொடர்பில் மூத்த நீதிபதிகள் இலங்கைக்கான இந்திய உயராணையர் சந்தோஷ் ஜாவிடம் பகிர்ந்துகொண்டனர். அத்தோடு இந்த முயற்சிக்காக இந்திய அரசு மற்றும் இந்திய நீதித்துறைக்கு தமது நன்றியையும் அவர் கள் வெளிப்படுத்தினர்.

இந்தப் பட்டறையானது இரண்டு பாகங்களாகப் பிரிக்கப்பட்டு, ஒழுங்குசெய்யப்பட்டிருந்தது. அதன்படி போபாலில் உள்ள தேசிய நீதித்துறை அகாடமியில் 3 நாட்கள் பயிற்சி அமர்வு நடைபெற்றது. அதனைத் தொடர்ந்து, புதுடில்லியில் 2 நாட்கள் சில நிகழ்வுகள் ஒழுங்குசெய்யப்பட்டிருந்தன. அத்தோடு போபாலில் இந்திய நீதிபதிகள், வளவாளர்கள் மற்றும் தொழில்நுட்ப நிபுணர்களுடன் இலங்கையின் மூத்த நீதிபதிகள் அரசமைப்புப்பு, காலநிலை நீதி மற்றும் சுற்றுச்சூழல் பாதுகாப்பு, புதிய தொழில்நுட்ப முன்னேற்றதத்ஸ்ரீனால் நீதித்துறைசார் சேவைகளில் ஏற்படும் மாற்றங்கள், மனித உரிமைகள் மற்றும் சர்வதேச சட்டப் பொறுப்புக்களில் ஏற்பட்டுவரும் புதிய மாற்றங்கள், நீதித்துறை பற்றிய ஊடகங்கள் மற்றும் பொதுமக்களின் பார்வை உள்ளிட்ட பல்வேறு விடயதானங்கள் தொடர்பில் விரிவாகக் கலந்துரையாடினர்.

# ஜப்பான் 1 மில். டொலர் உதவி

சூறாவளி பேரழிவிற்கு உதவும் விதமாக ஜப்பான் சர்வதேச புலம்பெயர் அமைப்பின் மூலம் தங்குமிடங்களுக்கு ஒரு மில்லியன் அமெரிக்க டொலர்களை வழங்குவதாக அறிவித்துள்ளது.

இலங்கைக்கான ஜப்பான் தூதுவர் தங்கிய அகியோ இசொமதா, சர்வதேச புலம்பெயர் அமைப்பின் இலங்கைக்கான தூதரகத் தலைவர் கிறிஸ்டின் பார்கோவுடன் இணைந்து, பேரிடர் முகாமைத்துவப் பணிப்பாளர் சதுர லியனாரச்சியிடம் தங்குமிடங்களை ஒப்படைத்தார்.

சர்வதேச புலம்பெயர் அமைப்பின் மூலம் வழங்கப்படும் இந்த நன்கொடை உதவி, ஒரு மில்லியன் அமெரிக்க டொலர் மதிப்புடையதாகும், இது 2.5 மில்லியன் அமெரிக்க டொலர் அவசர நன்கொடயின் ஒரு பகுதியாகும்.

இதை ஜப்பான் அரசு டிசம்பர் 16 ஐக்கிய நாடுகளின் அமைப்புகளான சர்வதேச புலம்பெயர் அமைப்பு, உலக உணவுத் திட்டம் மற்றும் ஐக்கிய நாடுகளின் சிறுவர் நிதியம் ஆகியவற்றுடன் இணைந்து இலங்கை ஆளும்தரப்பிற்கு வழங்க முடிவு செய்தது.

கண்டி, பதுளை மற்றும் கேகாலையில் கடுமையாகப் பாதிக்கப்பட்ட வீடுகளுக்கு சர்வதேச புலம்பெயர் அமைப்பு மூலம், ஜப்பான் சமையலறைப் பொருட்கள், கழுவும் பொருட்கள் மற்றும் படுக்கைப் பொருட்கள் உட்பட 615 தங்குமிடங்களை வழங்கவுள்ளது.

இதேவேளை, இடம்பெயர்ந்த மக்களின் அன்றாட வாழ்க்கையின் அத்தியாவசியத் தேவைகளின் ஒரு பகுதியாக அவர்களுக்கு பாதுகாப்பான வாழ்க்கை இடத்தை உறுதி செய்வது ஒரு அவசரத் தேவை என்று தூதர் இசொமதா தனது கருத்துக்களில் கூறினார்.

அத்துடன், இந்த உதவி ஜப்பானுக்கும் இலங்கைக்கும் இடையிலான வலுவான நம்பிக்கை மற்றும் நட்பைப் பிரதிபலிக்கிறது, மேலும் தேவைப்படும் காலங்களில் இலங்கை மக்களை ஆதரிப்பதில் ஜப்பானின் அசைக்க முடியாத அர்ப்பணிப்பையும் இது அடிக்கோடிட்டுக் காட்டுகிறது. இந்த கடினமான காலகட்டத்தை எதிர்கொள்ளும் இலங்கை மக்களுடன் ஜப்பான் முழு ஒற்றுமையுடன் நிற்கிறது என்றும் வலியுறுத்தினார்.

# கண்டி, நுவரெலியா, மாத்தளை ஆகிய மாவட்டங்களில் மண் சரிவு அபாயம்

*கண்டி, நுவரெலியா மற்றும் மாத்தளை மாவட்டங்களில் மீண்டும் அதிகளவான மழை வீழ்ச்சி பதிவாகியுள்ளது. எனவே குறித்த மாவட்டங்களில் இன்னும் மண்சரிவு அபாய எச்சரிக்கை நீங்கவில்லை. இது குறித்து மக்கள் அவதானத்துடன் செயற்படவேண்டும் என தேசிய கட்டட ஆராய்ச்சி நிறுவனத்தின் பணிப்பாளர் வசந்த சேனாதீர தெரிவித்தார்.*

*இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது:*

*நேற்று வெள்ளிக்கிழமை காலை 6 மணியுடன் நிறைவடைந்த கடந்த 48 மணித்தியாலங்களில் கண்டி - உடுதும்பர பிரதேசத்திலும், நுவரெலியா - வலப்பனை மற்றும் உரங்கெத்த பிரதேசங்களிலும், மாத்தளை - ரத்தோட்டையிலும் அதிகளவான மழை வீழ்ச்சி பதிவாகியுள்ளது. உடுதும்பர பிரதேசத்தில் சுமார் 300 மில்லி மீற்றர் மழை வீழ்ச்சி பதிவாகியுள்ளது.*

*அதற்கமைய அதனை அடிப்படையாகக் கொண்டு தேசிய கட்டட ஆராய்ச்சி நிறுவனத்தினால் மீண்டும் கண்டி மாவட்டத்தில் சில பிரதேச செயலகப்பிரிவுகளுக்கு மண்சரிவு சிவப்பு அபாய எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது. இம்மாவட்டத்தில் தொலுவ, உடுதும்பர, மினிப்பே, மெததும்பர ஆகிய பிரதேச செயலகப்பிரிவுகளுக்கு இவ்வாறு சரிவு சிவப்பு அபாய எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.*

*அதேபோன்று நுவரெலியா மாவட்டத்தில் மத்துரட்ட, நில்தண்டாஹேன, ஹங்குராங்கெத்த மற்றும் வலப்பனை பிரதேச செயலகப்பிரிவுகளுக்கும் மண்சரிவு எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது. மாத்தளை மாவட்டத்தில் 100 மில்லி மீற்றருக்கும் அதிக மழை வீழ்ச்சி பதிவாகியுள்ளது. கடந்த வாரங்களில் பெய்ய கடும் மழை காரணமாக மண்ணின் ஈரப்பதன் அதிகமாகவுள்ளது. சில தினங்களாக மழை பெய்யாவிட்டாலும், மீண்டும் கடந்த இரு தினங்களாகப் பெய்த மழை காரணமாக மண்ணின் ஈரப்பதன் மேலும் அதிகரித்துள்ளது.*

*இந்நிலையில் உடுதும்பர - தேனப்பிட்டிய பிரதேசத்தில் இடம்பெற்ற மண்சரிவில் சில வீடுகள் சேதமடைந்துள்ளன. நுவரெலியா - திக்கில்லகஸ்கட, வலப்பனை வீதியிலும் மண்சரிவொன்று இடம்பெற்றுள்ளது.*

*இன்னும் சில தினங்களுக்கு இந்த காலநிலை தொடரும் என வளிமண்டலவியல் திணைக்களம் எதிர்வு கூறியுள்ளது. பெரும்பாலான பிரதேசங்களில் மண்சரிவுக்கான அறிகுறிகள் தென்பட்டுள்ளன. எனவே அவ்வாறான பகுதிகளில் வாழும் மக்கள் மிகுந்த அவதானத்துடன் செயற்பட வேண்டும் - என்றார்.*

### பேரிடரால் பாதிக்கப்பட்ட

# வழிபாட்டிடங்கள், தொல்பொருள் நிலைகளின் சீரமைப்புப் பற்றிக் கொழும்பில் கூடி ஆராய்வு

'தித்வா' சூறாவளியால் பாதிக்கப்பட்ட நாட்டில் உள்ள மத, கலாசார மற்றும் தொல்பொருள் தளங்களில் மேற்கொள்ளப்பட வேண்டிய சீரமைப்புப் பணிகள் குறித்த கலந்துரையாடல் வியாழக்கிழமை அரசுத் தலைவர் அலுவலகத்தில் புத்தசாசன, சமய மற்றும் கலாசார அலுவல்கள் அமைச்சர் ஹினிதும சுனில் செனெவி தலைமையில் மூன்று நிகாயாக்களின் மகா சங்கத்தினர் மற்றும் ஏனைய மதத் தலைவர்களின் பங்கேற்புடன் நடைபெற்றது.

நாட்டில் ஆயிரத்துக்கும் மேற்பட்ட மத, கலாசார மற்றும் தொல்பொருள் தளங்கள் பேரிடரினால் சேதமடைந்துள்ளதாகவும், அந்த இடங்களில் தேவையான சீரமைப்புப் பணிகளை உடனடியாகத் தொடங்கி, அவற்றை முன்னர் இருந்த நிலைக்கு மீளமைக்க நடவடிக்கை எடுக்கப்படும் என்றும் புத்தசாசன, சமய மற்றும் கலாசார அலுவல்கள் அமைச்சர் ஹினிதும சுனில் செனெவி தெரிவித்தார். மரியாதைக்குரிய மகா சங்கத்தினர் மற்றும் மதத் தலைவர்களின் வழிகாட்டுதலின் கீழ், அந்த இடங்களின் தொன்மையைப் பாதுகாத்து, அனைத்து தொடர்புடைய தரப்பினரின் பங்கேற்புடன் சீரமைப்புப் பணிகளை மேற்கொள்ள எதிர்பார்க்கப்படுவதாகவும் அமைச்சர் மேலும் தெரிவித்தார்.

சீரமைப்புப் பணிகளுக்குத் தேவையான மனித வளங்கள் மற்றும் நிதி தற்போது சேகரிக்கப்பட்டு வருவதாகவும், அந்தத் தளங்கள் தொடர்பான தொழில்நுட்ப மதிப்பீடுகளுக்கு ஒப்பந்த அடிப்படையில் தேவையான தொழில்நுட்ப அதிகாரிகளை ஆட்சேர்ப்பு செய்யும் பணி தொடங்கப்பட்டுள்ளதாகவும் புத்தசாசன, சமய மற்றும் கலாசார அலுவல்கள் அமைச்சின் செயலாளர் பிரின்ஸ் சேனாதீர இங்கு தெரிவித்தார்.

இந்த நடவடிக்கைகளுக்கு புத்தசாசன, சமய மற்றும் கலாசார அலுவல்கள் அமைச்சின் அதிகாரிகளையும், அதன் கீழ் உள்ள நிறுவனங்களின் அதிகாரிகளையும் ஈடுபடுத்த திட்டமிடப்பட்டுள்ளது என்றும் செயலாளர் குறிப்பிட்டார். மேலும், சேதமடைந்த மதத் தலங்களைச் சீரமைப்பதற்காக புத்தசாசன, சமய மற்றும் கலாசார அலுவல்கள் அமைச்சின் கீழ் நிறுவப்பட்ட நிதியத்திற்கு, தற்போது நன்கொடையாளர்களிடமிருந்து அதிகமான நிதி நன்கொடைகள் கிடைத்து வருவதாகவும் அமைச்சின் செயலாளர் தெரிவித்தார்.

நேற்று கூடிய சபை, இந்தப் சீரமைப்புப் பணிகளை மேற்பார்வையிடும் சர்வமதக் குழுவாகத் தொடர்ந்து செயல்படுவது குறித்தும் கவனம் செலுத்தியதுடன், அதன்படி, கட்டுமானங்களின் முன்னேற்றத்தை இந்தக் குழுவிடம் தொடர்ந்து முன்வைப்பது குறித்தும், வெளிப்படைத்தன்மையுடன் நிதியத்திற்கான, வெளிநாட்டு உதவிகள், வெளிநாட்டு அமைப்புகள் ,பௌத்த அமைப்புகள் மற்றும் மத அமைப்புகளின் உதவிகளைப் பெறும் பணியை குழுவிடம் ஒப்படைப்பது குறித்தும் கலந்துரையாடப்பட்டன.

தொல்பொருள் ஆராய்ச்சியாளர்கள் மற்றும் சுவரோவியப் பாதுகாவலர்கள் மற்றும் கட்டிடக் கலைஞர்களின் அறிவு தேவைப்படும் பேரிடரினால் கடுமையாகச் சேதமடைந்த மற்றும் சாதாரண நிர்மாணத்தின் கீழ் மீளமைக்க முடியாத 8 இடங்களை மத்திய கலாசார நிதியம் அடையாளம் கண்டுள்ளதாகவும், அவற்றுக்கு 500 மில்லியன் ரூபாய்க்கு மேல் செலவாகும் என்று மதிப்பிடப்பட்டுள்ளதாகவும் இங்கு தெரிவிக்கப்பட்டது. இந்த நடவடிக்கைகளின் முன்னேற்றம் குறித்து கலந்துரையாட இந்த குழு மாதத்திற்கு ஒரு முறை கூடுவது என்றும் இதன்போது முடிவு செய்யப்பட்டது.

பாதிக்கப்பட்ட மக்களுக்கு உதவி வழங்குவதிலும், பாதிக்கப்பட்ட மக்களின் இயல்பு வாழ்க்கையை மீட்டெடுப்பதிலும் ஆளும்தரப்பு தலையிட்டதற்கு மதத் தலைவர்கள் பாராட்டு தெரிவித்தனர். மேலும், இந்த விடயங்களை மிகச் சிறப்பாக நிர்வகித்ததற்காக அரசாங்கத்திற்கு தமது பாராட்டுகளைத் தெரிவித்தனர். மேலும், சேதமடைந்த மதத் தலங்களை மீண்டும் கட்டியெழுப்புவதில் ஆளும்தரப்பின் உடனடி நடவடிக்கைக்கு அவர்கள் தங்கள் பாராட்டுகளையும் தெரிவித்தனர்.

# மோசடிக்காரர்களிடம் தகவல் பகிராதீர்கள்

### பொலிஸார் எச்சரிக்கை

*இயற்கைப் பேரிடரால் பாதிக்கப்பட்டு, குடும்ப உறவுகளை இழந்து நிர்க்கதியாகியுள்ள சிறுவர்கள் தொடர்பான தகவல்களைச் மோசடிக்கார சமூக ஊடகங்கள் மூலம் கோரும் எந்தவொரு நபருக்கும் தகவல்களைப் பகிர வேண்டாம் என பொலிஸ் ஊடகப் பேச்சாளர் வுட்லர் தெரிவித்துள்ளார்.*

*அவர் இது தொடர்பில் மேலும் தெரிவித்த தாவது:*

*இயற்கைப் பேரிடரால் துரதிஷ்டவசமாக பாதிக்கப்பட்டு, பெற்றோர்கள், உறவினர்கள் மற்றும் பாதுகாவலர்களை இழந்து பல சிறுவர்கள் நிர்க்கதியாகியுள்ளனர். இவ்வாறான தொரு இக்கட்டான சூழ்நிலையை பயன்படுத்தி மோசடிக்கார சமூகவளைத் தளங்கள் ஊடாக சிறுவர்கள் தொடர்பான தகவல்களைக் கோரி வருகின்றனர். இவ்விடயம் தொடர்பில் பொலிஸ் சிறுவர் மற்றும் மகளிர் துஸ்பிரயோக தடுப்பு, விசாரணைப் பணியகப் பணிப்பாளருக்குத் தகவல் அறியக்கிடைத்துள்ளது.*

*நிர்க்கதியாகியுள்ள சிறுவர்களைப் பராமரித்தல் மற்றும் தத்தெடுத்து ளர்க்கும் உண்மையான நோக்கத்துடன் எவரேனும் இருப்பாராயின், அவ்வாறு உதவ முன்வரும் நபர்கள் சிறுவர் பாதுகாப்பு அதிகார சபை மற்றும் சிறுவர் மற்றும் மகளிர் துஸ்பிரயோக தடுப்பு, விசாரணைப் பணியகம், பிரதேச செயலகம் மற்றும் கிராம சேவை உத்தியோகத்தரையும் தொடர்புகொண்டு தகவல்களைப் பெறமுடியும். அவற்றை தவிர்த்து சமூக வளைத்தங்கள் மூலம் சிறுவர்கள் தொடர்பான தகவல்களைக் கோருவது குற்றச்செயலாகவே கருதப்படும்.*

*சட்டத்துக்குப் புறம்பாக சிறுவர்களை அறிமுகமில்லாத நபர்கள் பொறுப்பேற்றுக்கொண்டால், அச்சிறுவர்கள் பாலியல் துஸ்பிரயோகம், வீட்டு வேலைகளுக்குப் பணியமர்த்தல் மற்றும் வன்முறைகளுக்கு ஆளாக் கூடும். ஆகையால் இவற்றைக் கருத்தில் கொண்டு பொதுமக்களை பொறுப்புடன் செயற்படுமாறு வலியுறுத்துகிறேன் - என்றார்.*



காலைக்கதிர்
Kalaikkathir

## அதிக ஆபத்து....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

செலுத்தியுள்ளோம். பசு, ஆடு, கோழி உள்ளிட்ட பண்ணையாளர்களுக்கு அதனை வழங்குவோம். அத்துடன் மீனவர்களுக்கு தேவையான உதவிகளை வழங்கவும்,அவர்களின் படகுகளை சீரமைக்கவும் நடவடிக்கை எடுக்கப்படும்.

இதேவேளை பாதிக்கப்பட்ட மாணவர்களுக்கு25,000ரூபாகொடுப்பனவை வழங்குவோம். ஜனபதி நிதியத்தில் இருந்து 10,000 ரூபாவும் திறைசேரியில் இருந்து 15,000 ரூபாவும் வழங்கவுள்ளோம்.

அந்த மாணவர்களை அடையாளம் காண கிராம சேவகர் ஊடாக நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. பாதிக்கப்பட்ட 6,20,000 குடும்பங்கள்உள்ளன.அவற்றில்மாணவர்கள் தொடர்பில் தகவல்களை பெற்று அந்த கொடுப்பனவு வழங்கப்படும்.

புதிய பாடசாலைத் தவணை தொடங்க முன்னர்அதனைவழங்குவதற்குநடவடிக்கை எடுக்கப்படும். ஏற்கனவே கொடுக்கப்படும் எந்தக் கொடுப்பனவும் இவற்றுக்காக நிறுத்தப்படாது.

கைத்தொழில் மற்றும் வர்த்தக நிலையங்கள் தொடர்பில் கணக்கெடுப்பு நடத்தப்பட்டுள்ளது. 9,600 பேருக்கு இதற்காக 2,00,000 ரூபா வீதம் வழங்கப்படும். கட்டடங்களுக்கும் பாதிப்புகள் ஏற்பட்டுள்ளன. 5 இலட்சம் ரூபா ஆரம்பமாக வழங்கப்படும். மதிப்பீடுகள் இன்றி அது வழங்கப்படும். எவருக்காவது அதனை முதற்கட்டமாக பெறவேண்டுமென்றால் பெற்றுக்கொள்ள முடியும். பின்னர் மதிப்பீடு செய்த பின்னர் 50 இலட்சம் ரூபா வரையில் வழங்கப்படும்.

அதேபோன்று பெரும் கைத்தொழில் துறைக்குசலுகைக்கடன்களைவழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். வங்கி ஊடாகவே இது வழங்கப்படும். 25 மில்லியன் ரூபா வரையில் கடன் பெற்றுக்கொள்ள முடியும்.

முழுமையாகவீடுகளைஇழந்தவர்களுக்கு 50 இலட்சம் ரூபா வழங்கப்படும் என்று கூறினேன். ஆளும்தரப்பு காணியை வழங்கும்.வழங்க முடியாவிட்டால் 50, இலட்சம்ரூபாவரையில்வழங்கநடவடிக்கை எடுக்கப்படும்என்று கூறியிருந்தேன். ஆனால் முழுமையாகச் சேதமடைந்த வீடுகளுக்கு மாத்திரமன்றி மக்கள் வசிக்க முடியாது என்று அபாய எச்சரிக்கை உள்ள வீடுகள் தொடர்பிலும்அவதானம்செலுத்த வேண்டும்.

இதற்கு முன்னர் எச்சரிக்கை வலயமாக அறிவிக்கப்பட்ட பிரதேசங்களிலும் வீடுகள் உள்ளன. இவர்கள் அனைவரையும் அபாய வலயத்தில் இருந்து பாதுகாப்பான இடங்களில் மீள் குடியேற்றுவதே ஆளும்தரப்பின் கொள்கையாகும்.

அபாய வலயத்தில் வசிக்கும் ஏனைய மக்களையும்அங்கிருந்துவெளியேற்றுவோம். அவர்களுக்காக 2,000 வீடுகளுக்கான வேலைத்திட்டங்கள்முன்னெடுக்கப்படுகின்றன. அவர்களுக்கு25 இலட்சம்ரூபாவழங்கப்படும்.

அந்த்தத தொகையை அதிகரிக்கவும் நடவடிக்கை எடுக்கப்படும். எவ்வாறாயினும் 2027ஆம் ஆண்டளவில் அதிக ஆபத்து வலயத்தில் எந்தவொரு குடும்பமும் வாழ முடியாத வகையில் சட்டத்தை தயாரிப்போம். அவர்களைவெளியில்கொண்டுவருவதற்கான நிதி ஒதுக்கீடுகளை செய்வோம்.

பாதிக்கப்பட்ட மக்களை மீள கட்டியெழுப்புவதே எமது நோக்கம். அதற்காகவே ஆளும்தரப்பு என்றவகையில் எங்களால் முடிந்தநிவாரணதொகையைவழங்கிஅவர்கள் இருந்த இடத்தில் இருந்து நிலைநிறுத்தவே நடவடிக்கை எடுத்துவருகிறோம்.

யாருக்காவது இந்த உதவித் தொகை கிடைக்கவில்லை என்றால் வீதியில் கதைத்துக்கொண்டிருக்காமல், பேரிடர் உதவி நிலையத்தில் முறையிட்டால், அது தொடர்பில் நடவடிக்கை எடுக்கப்படும். எனவே ஆளும்தரப்பு என்ற வகையில் எமது பொறுப்புக்களை இதுவரை நிறைவேற்றி இருக்கிறோம்என்றதிருப்திஎமக்குஇருக்கிறது - என்றார்.

## எல்லை....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பக்கத்தில் நிறைவேற்று அரசுத் தலைவர் முறைமை இல்லாமல் செய்யப்பட்டு நாடாளுமன்றஆட்சிமுறைமையைஅமைத்தல் மற்றும் நிறைவேற்று அதிகாரம் இல்லாத அரசுத் தலைவரை நியமித்தல் தொடர்பில் குறிப்பிடப்பட்டுள்ளது. அதன் பிரகாரம் புதிய அரசமைப்பு உருவாக்கத்தின்போது நிறைவேற்று அரசுத் தலைவர் முறைமை நீக்கப்பட்டுநாடாளுமன்றஆட்சிமுறைமையை ஏற்படுத்த நடவடிக்கை எடுக்கப்படும். அது தொடர்பான நடவடிக்கை இடம்பெற்று வருகிறது. புதிய அரசமைப்புப்பு இன்றி நிறைவேற்றுஅரசுத்தலைவர்முறைமையை இல்லாமல்செய்ய முடியாது. இது தொடர்பான அவதானங்கள் செலுத்தப்பட்டுள்ளது. நாட்டின் பிரதான பிரச்சினைகள் தொடர்பில் அவதானம்செலுத்தப்படுவதுடன்,இந்தவிடயம் தொடர்பிலும் அவதானம் செலுத்தப்படும். இது தொடர்பான காலப்பகுதி தொடர்பில் எதிர்காலத்தில் அறிவிக்கப்படும்.

அத்துடன் மாகாண சபைகள் தேர்தலை கூடிய விரைவில் நடத்துவதே ஆளும்தரப்பின் எதிர்பார்ப்பாகும். அதற்குத் தேவையான நடவடிக்கைகள் தற்போது முன்னெடுக்கப்படுகின்றது. 2017/17ஆம்இலக்க மாகாண சபைகள் தேர்தல் சட்டத்திற்கமைய எல்லை நிர்ணயம் தொடர்பிலும், தேர்தல் தொகுதிகள் தொடர்பிலும் அறிக்கைகள் கிடைத்த பின்னர் அதற்கு நாடாளுமன்றத்தின் அனுமதி கிடைத்த பின்னர் தேர்தலை நடத்த முடியுமாக இருக்கும்.

இதுவரையில்எல்லைநிர்ணயநடவடிக்கை முடிவடையாத காரணத்தினால் மாகாண சபைகள் தேர்தலை நடத்த முடியாமல் இருக்கின்றது. இதனால் இதில் திருத்தங்களை மேற்கொண்டு பழைய முறையில் தேர்தலை நடத்துவதா என்று ஆராயப்பட்டுதீர்மானங்கள் எடுக்கப்படும். 2026ஆம் ஆண்டில் மாகாண சபைத் தேர்தலை நடத்துவதற்கு தேவையான நிதி ஒதுக்கப்பட்டுள்ளது.

மேலும் ஆளும்தரப்பின் குற்றப்பத்திரிகை அலுவலகத்தை அமைப்பது தொடர்பில் புதிய சட்டத்தை அறிமுகப்படுத்துவதற்காக பரிந்துரைகளுடனான அறிக்கையை முன்வைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். இது தொடர்பில் தொழில்நுட்ப ரீதியிலான குழுவொன்றுக்காக அமைச்சரவை அனுமதி வழங்கப்பட்டுள்ளது. அந்தக் குழுவின் பரிந்துரைகளுக்கமைய அது தொடர்பான சட்டவரைபுகளை நாடாளுமன்றத்தில் முன்வைக்க நடவடிக்கை எடுக்கப்படும் - என்றார்.

## பொருளாதார....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

உதவிகளுக்கான குறைநிரப்பு பிரேரணை மீதான விவாதத்தில் கலந்து கொண்டு உரையாற்றுகையிலேயே இதனைத் தெரிவித்தார். அவர் மேலும் தெரிவித்ததாவது:

தித்வா சூறாவளியின் பின்னர் கடந்த 3 வாரங்களாக நாட்டை வழமைக்குக் கொண்டுவருவதற்காகப் பல்வேறு வேலைத் திட்டங்களை முன்னெடுத்து வருகின்றோம். நவம்பர் 27 முதல் முப்படையினர், அரச அதிகாரிகள், மக்கள், சர்வதேச சமூகம், எதிர்க்கட்சி உறுப்பினர்கள் வழங்கிய ஒத்துழைப்புகள் மூலம் அரசுத் தலைவரின் தலைமைத்துவத்தில் முன்னெடுத்த நடவடிக்கைகள்ஊடாகவேநாட்டைவழமைக்கு கொண்டுவர முடியுமாகி இருக்கின்றது.

2025ஆம் ஆண்டில் பேரிடர் உதவிகளுக்காக 75 பில்லியன் ரூபா ஒதுக்கப்பட்டுள்ளது. 2026ஆம் ஆண்டில் 500 பில்லியன் ரூபா குறைநிரப்பு ஊடாக ஒதுக்கப்பட்டுள்ளது. எமது பொருளாதாரத் திட்டமிடல்களுக்கு பாதிப்புகள் இல்லாமலேயே இந்த ஒதுக்கீடுகள் செய்யப்படுகின்றன.

நாங்கள் கடன் சுமைக்குள் சிக்கிக்கொள்ளாமல் பயணிக்கும் வகையிலேயே இந்த திட்டமிடல்கள் நடக்கின்றன. எமது திட்டமிடல்களால்பொருளாதார இலக்குகளுக்கு பாதிப்புஇல்லாமல்இதனைச்செய்ய முடியுமாக இருக்கின்றது.

இந்த நேரத்தில் சர்வதேச சமூகத்தினர், புலம்பெயர் சமூகத்தினர், நாட்டு மக்கள், தனியார் நிறுவனத்தினர் என்போர் பெரும் பங்களிப்பை வழங்கியுள்ளனர். இவர்களை நாங்கள் பாராட்டுகின்றோம். ஆளும்தரப்பின் மீதான நம்பிக்கை காரணமாகவே இவ்வாறு உதவிகள் கிடைக்கின்றன.

எமது இந்த நடவடிக்கையின்போது இதில் யாரை இணைத்துக்கொள்வது என்பது தொடர்பில் சிந்திக்க வேண்டியுள்ளது. நம்பிக்கையை இழந்த, பேரழிவுகளின் போது மோசடிகளில் சிக்கியவர்களை நாங்கள் இந்த நேரத்தில் இணைத்துக்கொள்ளாமல் இருப்போம் என்ற யோசனையை முன்வைக்கின்றோம்.

இந்த நேரத்தில் முழு நாட்டையும் ஒன்றிணைக்கவும் மற்றும் சர்வதேச நாடுகள் முன்வருவதற்கும் நாங்கள் முன்வைத்துள்ள ஊழல் அற்ற ஆளும்தரப்பு தொடர்பான யோசனைகள் மீதான நம்பிக்கையே காரணமாக அமைந்துள்ளது - என்றார்

## இழப்பீடு....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அழிந்துள்ளன, இலங்கை முழுவதும் இப்படியான பேரழிவு நடந்துள்ளது.

அண்மைய உலக வங்கித் தரவுகளின்படி ஒவ்வொரு வருடமும் கிட்டத்தட்ட 380 மில்லியன் டொலர் பேரிடர்களினால் அழிக்கப்படுகின்றது. வெள்ளத்தினால் மட்டும் ஒவ்வொரு வருடமும் 240 மில்லியன் டொலர் செலவிடப்படுகின்றது . இதேவேளை, இந்த அரசு தற்போது பாதிக்கப்பட்ட மக்களுக்கு நல்ல திட்டங்களை வழங்கியுள்ளது. பாராட்டுகின்றோம். அரசுடன் சேர்ந்து செயற்படவும் தயாராகவுள்ளோம்.

இதேவேளை,இழப்பீடுகளைவழங்குவதில் பெரும் குறைபாடுகள் காணப்படுகின்றன. இழப்பீடுகளைப் பதிவு செய்கின்ற, ஒழுங்கு செய்கின்ற அலுவலர்களின் பற்றாக்குறை இதற்குமுக்கியகாரணமாகவுள்ளதுஅதேநேரம் பெரும் அரசியலும் உள்ளுக்குள் ஓடுகின்றது.

பிரஜாசக்தி என்ற திட்டத்தின் ஊடாக முழுமையாக அரசியல் மயப்படுத்தப்பட்ட பல விடயங்கள் எமது மாவட்டங்களில் நடைபெறுகின்றன. இவ்வாறான பல சம்பவங்களை என்னால் பட்டியலிட முடியும். ஆனால் தற்போதைய துயரமான சூழலில் அதனை கூற நான் விரும்பவில்லை.

2004 இல் சுனாமி ஏற்பட்ட பின்னர், 2005 ஆம் ஆண்டு 13 ஆம் இலக்க இலங்கை பேரழிவு செயலாற்று சட்டம் என்ற ஒரு சட்டம் கொண்டுவரப்பட்டது. அந்தச் சட்டம் பேரிடர் முகாமைத்துவ சபை 3 மாதங்களுக்கு ஒரு தடவை கூடவேண்டும் என்று சொல்கின்றது.

அப்படியானால் இதுவரை 80 தடவைகள் பேரிடர் முகாமைத்துவச் சபை கூடியிருக்கவேண்டும். ஆனால் 2018 ஆம் ஆண்டு வரை 12 தடவைகள் மட்டுமே இந்த சபை கூடியுள்ளது. அதாவது வருடத்திற்கு ஒருதடவையே கூடியுள்ளது. 2018 ஆம் ஆண்டுக்கு பின்னர் 7 வருடங்கள் கழித்து 2025 ஒகஸ்ட் மாதமே அரசுத் தலைவர் தலைமையில் கூட்டப்பட்டது.

பேரிடர்கள் தொடர்பில் நாம் எவ்வளவு தயார் நிலையில் இருந்திருக்கின்றோம் எனப் பார்த்தால் நடந்த பேரழிவில்கூட நாம் அபாய நிலையை குறைக்க நடவடிக்கை எடுக்கவில்லை.தயார்படுத்தல்இருக்கவில்லை. மலையகத்தில் ஒவ்வொரு முறையும் மண்சரிவு ஏற்படுகின்றது. வெள்ளம் ஏற்படுகின்றது இடம்பெயர்ந்த மக்களை வெள்ளம் வடிந்த பின்னர் மீண்டும் அதே இடத்தில் குடியேற்றுவார்கள்.

வவுனியாவில்கூடகந்தசாமிநகர்என்றொரு கிராமம் உண்டு. அங்கு இயற்கை பேரிடர் இடம்பெறும்போது மக்கள் இடம்பெயர்வதும் பின்னர் அவர்களை மீண்டும் அதே இடத்தில் குடியமர்த்துவதும் தொடர் கதையாகவுள்ளது அதேபோன்று முல்லைத்தீவிலும் சில கிராமங்களில் இந்த நிலையுண்டு. தயவுசெய்து இவ்வாறான இயற்கைப் பேரழிவுகள் ஏற்படும் இடங்களில் மீண்டும் மீண்டும் மக்களை மீள்குடியமர்த்தாதீர்கள். அவ்வாறு மீள்குடியமர்த்துவதன் பயனை பார்க்கக்கூடியதாக இருக்கிறது. எமது உறவுகள் எத்தனை பேரை இழந்துள்ளோம்.

பேரிடர் முகாமைத்துவம் தொடர்பில் கடுமையான ஊழியர் பற்றாக்குறை உள்ளது. நிரப்பப்படாத வெற்றிடங்கள் உள்ளன. ஒவ்வொரு மாகாணத்திலும் பேரிடர் முகாமைத்துவ உதவிப் பணிப்பாளர் இருக்க வேண்டும் . ஆனால் இல்லை. எந்த மாவட்டத்தில் இருக்கிறது? ஒவ்வொரு பிரதேச செயலாளர் பிரிவிலும் பேரிடர் முகாமைத்துவ அதிகாரி இருக்க வேண்டும். ஆனால் இல்லை. மாவட்டத்திற்கு ஒருவர்தான் இருக்கின்றார்.

இந்தபேரிடர்பேரழிவுகளுக்கு முன்னைய ஆளும்தரப்புகளே முதன்மைக் காரணமாக இருப்பதுடன் தற்போதைய ஆளும்தரப்பும் அதற்குச் சிறு பங்களிப்பை செய்துள்ளது. எனவே பேரழிவுகளை எதிர்கொள்வதற்கான தயார்படுத்தல்கள் இல்லையென்றால் இவ்வாறான பேரழிவுகள் தொடரத்தான் போகின்றன - என்றார்.

## தரமற்ற....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பெற்றுக்கொடுக்கப்போகிறதென எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச கேள்வி எழுப்பினார்.

நாடாளுமன்றத்தில் நேற்று வெள்ளிக்கிழமை விசேட கூற்றொன்றை முன்வைத்து உரையாற்றியபோது இதனைத் தெரிவித்தார். அவர் மேலும் தெதரிவித்ததாவது:

தரமற்ற தடுப்பூசி பயன்படுத்தப்பட்டமையினால் ஹபரகட மற்றும் மத்துகம பிரதேசங்களில் இரு யுவதிகள் உயிரிழந்துள்ளனர். தற்சமயம் சட்டவிரோத மருந்துப்பொருள் மாபியா நடந்து வருகிறது. அரசமைப்புப்புச் சட்டத்தின் மூலம் சுகாதாரம் அடிப்படை உரிமையாக்கப்படும்போது, வாழ்வதற்கான உரிமையும் பலப்படும். இத்தகைய நிலைக்கு மத்தியில் தரமற்ற மருந்துகள் தொடர்பாக ஆளும்தரப்பு எடுக்கும் நடவடிக்கைகள் என்ன என்பதை முன்வைக்க வேண்டும்.

சுகாதாரத் துறையில் நிலவிவரும் ஊழல் மற்றும் மோசடிகளை அம்பலப்படுத்தும் வைத்தியர்ருக்ஷான்பெல்லனஊடகங்களுக்கு கருத்து தெரிவித்தமையை வைத்து அவர் பணி நீக்கம் செய்யப்பட்டுள்ளார். இது நியாயமற்ற செயலாகும்.

சுகாதாரத் துறையில் காணப்படும் தரமற்ற மருந்துகள் மற்றும் ஊழல், மோசடி விடயங்களைப்பேசுவதற்குஅவருக்குஉரிமை உண்டு. இவை அடிப்படை உரிமையாகும். வாழும் உரிமை மற்றும் சுகாதார உரிமை ஆகியன அடிப்படை உரிமைகள் ஆகும். ஆகவே இந்தப் பணி நீக்க நடவடிக்கை அநீதியான செயலாகும் . மேலும் தரமற்ற மருந்து ஏற்றியதால் உயிரிழந்த 37 மற்றும் 23 வயதுடைய பெண்களின் உரிமைகளை யார் பாதுகாக்கப்போகிறார்கள்? தரமற்ற மருந்தினால் உயிரிழந்த அந்த பெண்களுக்கு ஆளும்தரப்பின்பதில்என்னஎனக்கேட்கிறேன்.

அதேவேளை, அரசமைப்பில் தெளிவான திருத்தம் கொண்டு வரப்படும் என்று பிரதமர் தெரிவித்தார். இதற்கு நன்றி தெரிவித்துக் கொள்வதோடு, இந்தத் திருத்தம் மேற்கொள்ளப்படும் சமயத்தில் நமது நாட்டில் அடிப்படை உரிமைகள் தொடர்பிலான அத்தியாயத்தை விரிவுபடுத்த வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

சிவில் மற்றும் அரசியல் உரிமைகள் மட்டுமல்லாது, இலவச சுகாதாரம், இலவச கல்வி, கலாசார உரிமைகள் மற்றும் மத உரிமைகள் உட்பட பரந்த வரையறையில் இந்த அடிப்படை உரிமைகள் அமைய வேண்டும் - என்றார்

காலைக்கதிர்
ஆசிரியர்பீட
தொடர்புகளுக்கு

076 3983858

மின்னஞ்சல் முகவரி:
kalaikkathirnews@gmail.com

# சர்வதேச நன்கொடையாளர்கள் மாநாட்டை விரைந்து நடத்துக

## மு.கா. தலைவர் ஹக்கீம் வலியுறுத்து

பேரிடரில் பாதிக்கப்பட்ட மக்களையும் நகரத்தையும் விரைவாக மீள கட்டியெழுப்ப ஆளும்தரப்பு நடவடிக்கை எடுக்க வேண்டும். அதற்கு தேவையான நிதியை பெற்றுக்கொள்ள ஆளும்தரப்பு சர்வதேச நன்கொடையாளர் மாநாட்டை விரைவாக நடத்த நடவடிக்கை எடுக்க வேண்டும். அதற்காக அனுபவமுள்ள எமது முன்னாள்தலைவர்களைஒருமேசைக்குஅழைத்து ஆளும்தரப்பு கலந்துரையாட வேண்டுமென ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் தலைவர் ரவூப் ஹக்கீம் தெரிவித்தார்.

நாடாளுமன்றத்தில் நேற்று இடம்பெற்ற பேரிடர் உதவிகளுக்கான குறை நிரப்பு பிரேரணை மீதான விவாதத்தில் உரையாற்றுகையிலேயே இதனைத் தெரிவித்தார். அவர் மேலும் தெரிவித்ததாவது:

பேரிடர்ஒன்றுஏற்படும்போதுஆட்சியில்இருக்கும் ஆளும்தரப்பு அதற்கு முகம்கொடுக்கும்போது குறைபாடுகள் ஏற்படுகின்றன. இந்தப் பேரிடர் நாட்டின் பல மாவட்டங்களையும் பாதித்து இருந்தது. அதனால் அந்ததந்த மாவட்டங்களில் பொது மக்கள் சிவில் பிரஜைகள் முன்வந்து பாதிக்கப்பட்ட மக்களை மீட்பதற்கு நடவடிக்கை எடுத்திருந்தார்கள்.



அந்த வகையில் இந்த பேரிடரில் அதிகம் பாதிக்கப்பட்ட பிரதேசம் கண்டி மாவட்டத்தில் கம்பொளை பிரதேசமாகும். கம்பொளை பிரதேச சபை எமது அதிகாரத்துக்கு கீழே இருக்கிறது. என்றாலும் பிரதேச சபையில் அங்குள்ள குப்பைகளை அகற்றுவதற்கு தேவையான இந்திரங்கள் போதுமானதாக இல்லை. ஆளும்தரப்பின் ஆதரவும் போதுமானதாக இருக்கவில்லை. என்றாலும்எமதுகோரிக்கைக்கு அமைய, குறிப்பாக அக்கரைப்பற்று மேயர் முன்னாள் அமைச்சர் அதாவுல்லாஹ் எமக்கு உதவி செய்தார், அதேபோன்று நாடாளுமன்ற உறுப்பினர் ஹிஸ்புல்லாஹ் காத்தான்குடி நகரசபையின் உபகரணங்கள், இயந்திரங்கள் மற்றும் ஆட்களுடன் அங்கு வந்திருந்தார். அட்டாளைச்சேனை, ஏறாவூர், பொத்துவில் உள்ளிட்ட பல உள்ளூராட்சி மன்றங்களின்தலைவர்கள்உபகரணங்களுடன் அங்குவந்து எமக்கு உதவி செய்தார்கள். அதற்காக அவர்களுக்கு எனது நன்றியை தெரிவித்துக்கொள்கிறேன்.

அதேபோன்று கண்டி மாவட்ட ஆளும் கட்சி உறுப்பினர்கள் அமைச்சர்கள் என அனைவரும் ஒன்றிணைந்து, கம்பொளை உள்ளிட்ட அதற்கு அண்மித்த பிரதேசங்களை சுத்தப்படுத்தும் நடவடிக்கையை நாங்கள் மேற்கொண்டுவந்தோம். தற்போதும் எமது இயந்திரங்கள் அங்கு இயங்கி வருகின்றன.

அதேநேரம் ஆண்டியா கடவத்தை அல் ஹிக்மா பாடசாலை அங்கு தொடர்ந்து இயங்க முடியாதளவு மண்சரிவால் பாதிக்கப்பட்டுள்ளது. அந்த பாடசாலையை வேறு ஒரு இடத்துக்கு மாற்றுவது தொடர்பில் பல தரப்பினருடன் கதைத்திருக்கிறேன். குறிப்பாக பிரதமருடனும் கலந்துரையாடி இருந்தேன். அந்தப் பாடசாலை மாத்திரமல்ல, ரம்புக்கல்ல பாடசாலையும் மிக மோசமான முறையில் பாதிக்கப்பட்டுள்ளது. அந்த பாடசாலையையும் வேறு இடத்துக்கு கொண்டு செல்ல வேண்டி இருக்கிறது. அதனால் இது தொடர்பாக உடனடி பேரிடர் முகாமைத்துவ நடவடிக்கையை கல்வி அமைச்சு மேற்கொள்ள வேண்டும்.

அதேபோன்று சுகாதார அமைச்சும் உடனடி நடவடிக்கை மேற்கொள்ள வேண்டிஇரு கிறது. ஏனெனில் வத்தேகம வைத்தியசாலையை வேறு இடத்துக்கு மாற்ற வேண்டி இருக்கிறது. அதனால் கல்வி அமைச்சும் சுகாதார அமைச்சும் இந்த காலப்பகுதியில் விரைவாக செயற்பட்டு உடனடியான தீர்மானங்களை மேற்கொள்ள வேண்டி இருக்கிறது. வைத்தியசாலைகள் மற்றும் பாடசாலைகளை நிர்மாணிக்க வேண்டி இருக்கிறது. அதனால் ஆளும்தரப்பு விரைவாக சர்வதேச நன்கொடையாளர் மாவட்டுக்கு அழைப்பு விடுக்க வேண்டும். ஏனெனில் இந்த நன்கொடை மாநாடு தற்போதுள்ள பேரிடருக்கும் எதிர்காலத்தில் ஏற்படும் பேரிடரில் இருந்து பாதுகாப்பு நடவடிக்கைகளை மேற்கொள்ளவும் உதவியாக இருக்கும்.

அதேபோன்று முன்னாள் அரசுத் தலைவர் சந்திரிக்கா குமாரதுங்க அவரது நிதியத்தில் இருந்து உதவித்தொகை ஒன்றை பிரதமரிடம் கையளித்திருந்தார். அதேபோன்று இன்னும் அனுபவமுள்ள எமது முன்னாள் தலைவர்கள் இருக்கிறார்கள். அவர்கள் அனைவரையும் ஒரு மேசைக்கு அழைத்து கலந்துரைடி, சர்வதேச நன்கொடையாளர்மாநாட்டைநடத்தஆளும்தரப்பு நடவடிக்கை எடுக்க வேண்டும். ஏனெனில் பாதிக்கப்பட்டுள்ள வர்த்தக நகரங்களை விரைவக இயல்பு நிலைக்குகொண்டுவர நடவடிக்கை எடுக்க வேண்டும்.

குறிப்பாக கம்பொளையில் சிறப்பான நகரத்திட்டத்தை விரைவாக மேற்கொள்ள வேண்டும். அதேபோன்று ஏனைய நகரங்களையும் கட்டியெழுப்ப வேண்டும். குப்பைகளை அகற்றுவதற்கு போதுமான இயந்திரங்கள் இல்லாமை பெரிய குறையாகும். என்றாலும் பலரது ஒத்துழைப்பின் மூலம் நகரில் இருந்த குப்பைகளை அகற்ற நடவடிக்கை எடுத்தோம். அதேபா ன்று கண்டி மாவட்டத்தில் அதிகமான பாடசாலைகள் பாதிக்கப்பட்டுள்ளன. அதனால் அந்த பாடசாலைகளை வேறு இடங்களுக்கு மாற்றும்போது அந்த பாடசாலை சமூகம் ஏற்றுக்கொள்ளக்கூடிய தீர்மானங்களை மேற்கொள்ளவேண்டும்எனகேட்டுக்கொள்கிறேன் - என்றார்

# இலங்கையை மீளக் கட்டியெழுப்ப ரூபா 4,286 மில்லியன் நிதி உதவி

'இங்கையை மீளக்கட்டியெழுப்புவோம்' நிதியத்துக்கு இதுரையில் 4,286 மில்லியன் ரூபா நிதி கிடைக்கப் பெற்றுள்ளது. இதில் வெளிநாடுகளிலிருந்து மாத்திரம் சுமார் 6 மில்லியன் டொலர் கிடைத்துள்ளதாக நிதி, திட்டமிடல் மற்றும் பொருளாதார அபிவிருத்தி அமைச்சின் செயலாளர் ஹர்ஷன சூரியப்பெரும தெரிவித்தார். இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது:

இதற்கு முன்னர் 3,400 மில்லியன் ரூபாவுக்கு அதிக நிதி கிடைக்கப் பெற்றிருந்தது. தற்போது அந்தத் தொகை 4,286 மில்லியன் ரூபா வரை அதிகரித்துள்ளது. இதன் பெறுமதி 13.8 மில்லியன் டொலராகும். இதில் வெளிநாடுகளிலிருந்து மாத்திரம் சுமார் 6 மில்லியன் டொலர் கிடைக்கப் பெற்றுள்ளது. இந்தத் தொகை பொருள் மற்றும் சேவை ஒத்துழைப்புகளுக்கு அப்பால் கிடைக்கப் பெற்றதாகும்.

இதுவரையில் 4 பில்லியன் ரூபாவுக்கும் அதிக பெறுமதியுடைய உதவிகள் பொருட்களாகவும், சேவையாகவும் கிடைக்கப் பெற்றுள்ளன. மேலும் சர்வதேசநாணயநிதியம், உலகவங்கிமற்றும்ஆசிய அபிவிருத்தி வங்கி உள்ளிட்ட சர்வதேச நிதி நிறுவனங்களின் ஒத்துழைப்புக்களும் எதிர்பார்க்கப்படுகிறது. இதுவரையில் 43 நாடுகளிடமிருந்து உதவிகள் கிடைக்கப் பெற்றுள்ளன.

அமெரிக்கா, ஆஸ்திரேலியா, சீனா, பிரித்தானியா, ஜேர்மன், பூட்டான், இதாலி, கனடா, ஐக்கிய அரபு இராச்சியம், நியூசிலாந்து, மாலைத்தீவு, சவுதி, பிரான்ஸ், கொரியா உள்ளிட்ட நாடுகள் நிதி உதவிகளை வழங்கியுள்ளன. இதேவேளை ஸ்ரீலங்கன் எயாலைன்ஸ் கடன் மறுசீரமைப்பிற்கும்இணக்கப்பாடுஎட்டப்பட்டுள்ளது - என்றார்.

# கௌபே நிதிப் பரிவர்த்தனை ரூ. 2 பில்லியனைத் தாண்டியது

இலங்கையின் அரச டிஜிட்டல் கொடுப்பனவு தளமான றூலிஸஊணழிதீ, 2025ஆம் ஆண்டின் இறுதியில் மொத்த பரிவர்த்தனை பெறுமதியில் 2 பில்லியன் ரூபாயைத் தாண்டியுள்ளதாக டிஜிட்டல் பொருளாதார அமைச்சு குறிப்பிட்டுள்ளது.

கடந்த பெப்ரவரி 7ஆம் திகதி முதல் இந்த பரிவர்த்தனை தொடங்கப்பட்டதிலிருந்து, இதுவரை 69,000க்கும் மேற்பட்ட டிஜிட்டல் பரிவர்த்தனைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. இவை 215 அரச நிறுவனங்களின் 3,372 அரச சேவைகளை உள்ளடக்கியுள்ளன.

கடந்தஏப்ரல்10ஆம்திகதிஅறிமுகப்படுத்தப்பட்ட இணையவழி போக்குவரத்து அபராதக் கொடுப்பனவு முறைமை மூலம், இதுவரை 50,000க்கும் மேற்பட்ட பரிவர்த்தனைகளிலிருந்து 66 மில்லியன் ரூபாய்க்கும் அதிகமான வருமானம் ஈட்டப்பட்டுள்ளது.

தற்போது மேல், தென், வடக்கு, வடமேல் மற்றும் வடமத்திய மாகாணங்களிலும் அதிவேக நெடுஞ்சாலைகளிலும் நடைமுறையிலுள்ள இந்த அபராதக் கொடுப்பனவு சேவை, 2026 ஜனவரியில்மத்தியமாகாணத்திலிருந்துஆரம்பித்து நாடளாவிய ரீதியில் விரிவுபடுத்தப்படவுள்ளது.

தற்போதுவடமாகாணத்தின்அனைத்துஉள்ளூராட்சி நிறுவனங்களும், தென் மாகாணத்தின் அனைத்து பிரதேச செயலகங்களும் இந்த முறைமையுடன் இணைக்கப்பட்டுள்ளன. 2026ஆம்ஆண்டளவில்அனைத்துஉள்ளூராட்சி நிறுவனங்களையும் டிஜிட்டல் மயமாக்குவதை ஆளும்தரப்பு நோக்கமாகக் கொண்டுள்ளது.

கொத்தலாவல பாதுகாப்பு பல்கலைக்கழகம், இலங்கை பொலிஸ், தொழில்நுட்பக் கல்வி மற்றும் பயிற்சித் திணைக்களம், மொரட்டுவ பல்கலைக்கழகம்மற்றும்இலங்கைஅணுசக்திசபை ஆகியன2025இல்றூலிஸஊணழிதீதளத்திற்குஅதிக பங்களிப்பு செய்த நிறுவனங்களாகும். கடந்த நவம்பரில் ஏற்பட்ட பேரிடர் நிலைமைகளின் போது, 'இலங்கையை மீளக் கட்டியெழுப்புவோம்' பேரிடர் நிவாரண நிதியத்துக்காக சுமார் 14 மில்லியன் ரூபாயை திரட்ட றூலிஸஊணழிதீ உதவியுள்ளது.

டிஜிட்டல் பொருளாதார அமைச்சின் வழிகாட்டலின் கீழ், தகவல் மற்றும் தொடர்பாடல் தொழில்நுட்ப முகவர் நிலையம் மற்றும் லங்காபே ஆகியவற்றின் கூட்டு முயற்சியில் இந்தத் திட்டம் செயல்படுத்தப்படுகிறது.

இது 2030 ஆம் ஆண்டளவில் 15 பில்லியன் டொலர் பெறுமதியான டிஜிட்டல் பொருளாதாரத்தை கட்டியெழுப்பும் இலங்கையின் பயணத்தில் ஒரு முக்கிய மைல்கல்லாகக் கருதப்படுவதாக டிஜிட்டல் பொருளாதார அமைச்சு மேலும் தெரிவித்துள்ளது.

# 119ஐ தவறாகப் பயன்படுத்தும் நபர்கள்மீது கடும் நடவடிக்கை

## பொலிஸார் எச்சரிக்கை

119 என்ற பொலிஸ் அவசர சேவைப் பிரிவுக்கு தொடர்ச்சியாக தவறான தகவல்களை வழங்கி முறைகேடாக பயன்படுத்தும் நபர்களுக்கு எதிராக கடுமையான சட்ட நடவடிக்கை முன்னெடுக்கப்படும் எனவும் சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் பதில் பொலிஸ் ஊடகப் பேச்சாளர் வுட்லர் தெரிவித்தார்.

கொழும்பு பத்தரமுல்லையில் செய்தியாளர் சந்திப்பின்போது இவ்விடயம் தொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது:

119 என்ற பொலிஸ் அவசர சேவை இலக்கம் அண்மைகாலமாகதவறாகபயன்படுத்தப்படுவதை அவதானிக்கக்கூடியதாக உள்ளது. குறிப்பாக நாட்டில் ஏற்பட்ட பேரிடர் நிலைமையின் போதும் அதன் பின்னரும் பொலிஸ் அவசர சேவை இலக்கத்தைமுறைக்கேடாகபயன்படுத்தியஒருசில நபர்களுக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

பொதுமக்கள் முகம் கொடுக்க நேரிடும் விபத்துக்கள், குற்றச் சம்பவங்கள், சட்டத்திற்கு முரணான செயற்பாடுகள், மற்றும் பொலிஸாரின் உதவியை உடனடியாகப் பெற்றுக் கொள்வதற்கு அவசியமான ஏனைய சந்தர்ப்பங்களின்போது 119 என்ற எண்ணைத் தொடர்புக் கொள்ளலாம்.

தவறானமுறைப்பாடுகளும்பிறஅவசரசேவைகளுக்கு வழங்கப்பட வேண்டிய முறைப்பாடுகளையும் 119 என்ற அவசர சேவைக்கு அழைப்பை ஏற்படுத்தி தெரிவிக்கின்றனர்.

அத்தோடுஅவசரசேவைப்பிரிவுக்குதொடர்ச்சியாகதவறானமுறைப்பாடுகளைஅளிக்கும்நபர்கள் போலி தொலைபேசி எண்கள் மூலம் தொடர்புக் கொண்டுள்ளமையும் அவதானிக்கப்பட்டுள்ளது. உத்தியோகத்தர்களின் கடமைக்கு இடையூறு விளைவித்த திசைத்திருப்ப முயலும் நபர்களும் கண்டறியப்பட்டுள்ளனர்.

அவசர சேவைப் பிரிவுக்கு தொடர்ச்சியாக தவறான முறைப்பாடுகளை அளித்த நபர்களின் தொலைபேசிஎண்கள் தற்காலிகமாக இந்த சேவையைப்பெறமுடியாதவகையில்நிறுத்திவைக்கப்பட்டுள்ளன. ஆகையால் எதிர்வரும் நாட்களில் இந்த இலக்கதை தவறாக பயன்படுத்தும் எந்தவொரு நபர்களுக்குஎதிராகவும்கடுமையானநடவடிக்கை எடுக்கப்படும் - என்றார்.

காலைக்கதிர் Kalaikkathir

# உதவிகள் சரியாகக் கிடைப்பதற்கு முறையான திட்டங்கள் வேண்டும்

## முன்னாள் அமைச்சர் ரிஷாத் வலியுறுத்து

வெளிநாடுகளில் இருந்து கிடைக்கப்பெற்ற உதவிகளை பாதிக்கப்பட்ட மக்களுக்கு சரியான முறையில் கிடைப்பதற்கு ஆளும்தரப்பு முறையான வேலைத்திட்டம் ஒன்றை அமைக்க வேண்டும் என்பதுடன் ஆளும்தரப்பின் கொடுப்பனவுகளை பாதிக்கப்பட்டவர்கள் இலகுவான முறையில் பெற்றுக்கொள்ள ஆளும்தரப்பு நடவடிக்கை எடுக்க வேண்டும் என அகில இலங்கை மக்கள் காங்கிரஸ் தலைவர் ரிஷாத் பதியுதீன் தெரிவித்தார்.

நாடாளுமன்றத்தில் நேற்று வெள்ளிக்கிழமை இடம்பெற்ற பேரிடர் உதவிகளுக்கான குறை நிரப்பு பிரேரணை மீதான விவாதத்தில் உரையாற்றுகையிலேயே இதனைத் தெரிவித்தார். அவர் மேலும் தெரிவித்ததாவது:

நாட்டில் ஏற்பட்ட பேரிடரினால் பெருமளவில் சேதம் ஏற்பட்டுள்ளது. அந்தச் சேதங்களை ஈடுசெய்து மக்களுக்கு உதவி வழங்குவதற்கு தற்போது நிறைவேற்றப்படும் 500 பில்லியன் ரூபா போதுமானதல்ல. அதேநேரம் அரசுத் தலைவரும் பாதிக்கப்பட்ட மாவட்டங்களுக்கு சென்று, நிலைமைகளை அறிந்து வருகிறார். அதனடிப்படையில் மன்னாருக்கும் அரசுத் தலைவர் வந்தார்.



அங்கு பாதிக்கப்பட்டுள்ள மீனவர்களின் வாழ்க்கையை கட்டியெழுப்ப ஒரு வேலைத்திட்டத்தை ஆரம்பிக்குமாறு நாங்கள் கேட்டுக்கொண்டபோது, அதனை மேற்கொள்வதாக எமக்கு வாக்குறுதியளித்தார். ஏனைய மாவட்டங்களில் பாதிக்கப்பட்டுள்ள மீனவர்கள் தொடர்பாகவும் கவனம் செலுத்துமாறு கேட்டுக்கொள்கிறோம்.

அதேபோன்று பெருமளவில் விவசாய பூமிகள் பாதிக்கப்பட்டுள்ளன. விவசாயிகள் மீள இயல்பு நிலைக்கு வருவதற்கு தேவையான உதவிகளை ஆளும்தரப்பு வழங்கவேண்டும். என்றாலும் அதிகாரிகளின் அசமந்தப்போக்கு காரணமாக அவர்களுக்குக் கிடைக்கவேண்டிய உதவித் தொகைகள் கிடைக்குமா என்ற சந்தேகத்தில் இருக்கிறார்கள். அத்துடன் கிராம சேவகர்கள் சென்று பார்வையிடாத பல பாதிக்கப்பட்ட பிரதேசங்கள் இன்னும் இருக்கின்றன. தற்போது அவர்கள் பாதிக்கப்பட்டவர்களைப் பார்த்து, பாதிக்கப்பட்டமைக்கான ஆதாரமாக புகைப்படம் இருக்கிறதா, தண்ணீர் வந்ததா, பாதிக்கப்பட்டதா எனக் கேட்பதாக மக்கள் எங்களிடம் தெரிவிக்கிறார்கள்.

எனவே இந்த விடயத்தில் ஒரு பிரதேசத்தில் கிராமசேவகர், அபிவிருத்தி உத்தியோகத்தர், சமுர்த்தி அதிகாரி இருக்கிறார்கள். அவர்கள் அனைவரும் ஒன்றாகச் செயற்பட்டு, பாதிக்கப்பட்ட மக்களுக்கு கிடைக்கவேண்டிய உதவித் தொகைகளை விரைவாகப் பெற்றுக்கொடுக்க நடவடிக்கை எடுக்குமாறு கேட்டுக்கொள்கிறோம்.

அதேபோன்று பாதிக்கப்பட்ட மக்கள் இன்னும் முகாம்களிலும் வேறு இடங்களிலும் இருக்கிறார்கள். அவர்களுக்கு அறிவிக்கப்பட்ட உதவித்தொகைகளை எவ்வாறு பெற்றுக்கொள்வது என்ற சரியான வழிகாட்டல் இல்லாமல் இருக்கிறது. அதனால் பல இடங்களில் பிரதேச செயலகங்களுக்கு முன்னால் மக்கள் கொடுப்பனவுகளைக் கேட்டு ஆர்ப்பாட்டம் செய்து வருவதை காணக்கூடியதாக இருந்தது.

கம்பளை பிரதேசம் பெரியளவில் பாதிக்கப்பட்டுள்ளது. அந்த மக்கள் மிகவும் வசதி வாய்ப்புகளுடன் வாழ்ந்து வந்தவர்கள். தற்போது அனைத்தையும் இழந்து, ஆளும்தரப்பின் உதவிக் கொடுப்பனவை பெற்றுக்கொள்ள நீண்ட தூரம் பயணிக்க வேண்டி இருக்கிறது. அதனால் ஆளும்தரப்பு அந்த பணத்தை அந்த பகுதியில் இருக்கும் பள்ளிவால், விகாரை, கிராம சேவகர் பிரிவினூடாக பெற்றுக்கொடுக்க முடியும். இது தொடர்பில் நாங்கள் தெரிவித்தபோது பிரதேச செயலாளர்கள் அதனை மறுக்கிறார்கள். அதனால் ஆளும்தரப்புதான் அது தொடர்பில் நடவடிக்கை எடுக்க வேண்டும்.

பாதிக்கப்பட்ட மக்களுக்குத் தேவையான உதவிக் கொடுப்பனவுகளை ஆளும்தரப்பு வழங்குவதற்கு முன்னர், வியாபாரிகள், தனவந்தர்கள் தங்களின் சொந்த பணத்தை அள்ளிக்கொடுத்து, அவர்களின் தேவைகளை ஓரளவு பூர்த்தி செய்திருக்கிறார்கள். சகல மத குருக்களும் பெருமளவில் உதவி செய்துவருகிறார்கள். குறிப்பாக அகில இலங்கை ஜம்இய்யதுல் உலமா சபை கோடிக்கணக்கில் பணம் மற்றும் பொருட்களை சேர்த்துக்கொண்டு பாதிக்கப்பட்ட மக்களுக்கு பகிர்ந்தளித்து வந்திருக்கிறது.

வெளிநாடுகளில் இருந்து கிடைக்கப்பெற்ற உதவிகளை பாதிக்கப்பட்ட மக்களுக்கு சரியான முறையில் கிடைப்பதற்கு ஆளும்தரப்பு முறையான வேலைத்திட்டம் ஒன்றை அமைக்க வேண்டும். அதேநேரம் எதிர்காலத்தில் இவ்வாறான பேரிடர்கள் ஏற்படும்போது அதன் பாதிப்புகளை கட்டுப்படுத்திக்கொள்ள தேவையான வேலைத்திட்டத்தை ஆளும்தரப்பு மேற்கொள்ள வேண்டும் - என்றார்.

# செய்தி பொய் என்றால் அதனை மறுத்தீர்களா?

## ஆளும்தரப்பிடம் முஜிபுர் நெத்தியடி கேள்வி

'தித்வா' சூறாவளி தொடர்பான முன்னறிவித்தல்கள் தொடர்பில் இந்தியன் எக்ஸ்பிரஸ் உள்ளிட்ட இந்திய ஊடகங்கள் வெளியிட்டுள்ள செய்திகள் பொய்யானவை என்று கூறும் ஆளும்தரப்பு, அந்த செய்திகளை நிராகரித்து அந்த ஊடகங்களுக்கு கடிதம் அனுப்பியதாக எந்தத் தகவலும் இல்லை, அவ்வாறு கடிதம் அனுப்பியிருந்தால் அதனை சபையில் முன்வைக்க வேண்டும் என ஐக்கிய மக்கள் சக்தி உறுப்பினர் முஜிபுர் ரஹ்மான் தெரிவித்தார்.

நாடாளுமன்றத்தில் நேற்று வெள்ளிக்கிழமை இடம்பெற்ற பேரிடர் உதவிகளுக்கான குறைநிரப்பு பிரேரணை மீதான விவாதத்தில் கலந்துகொண்டு உரையாற்றுகையிலேயே இதனைத் தெரிவித்தார். அவர் மேலும் தெரிவித்ததாவது:

காலநிலை தொடர்பில் வளிமண்டலவியல் திணைக்களத்தின் பணிப்பாளர் அதுல சேனாநாயக்க நவம்பர் 11 ஊடகச் சந்திப்பொன்றை நடத்தி எதிர்வு கூறலொன்றை கூறினார். பின்னர் நவம்பர் 14, 17 ஆகிய நாள்களிலும் அது தொடர்பில் கூறியுள்ளார். பின்னர் 22. 23 ஆகிய நாள்களிலும் பிரதி பணிப்பாளரும் ஏற்படக்கூடிய பேரிடர் நிலைமைகள் தொடர்பில் எதிர்வு கூறல்களை தெரிவித்துள்ளார். இந்த எதிர்வுகூறல்கள் தொடர்பில் ஆளும்தரப்பு கவனம் செலுத்தவில்லை என்பதிலேயே சிக்கல் உள்ளது.

இதேவேளை நவம்பர் 17 தொடக்கம் பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் தலைமையில் பேரிடர் முகாமைத்துவ நிலையம், கட்டட ஆராய்ச்சி நிறுவனம் என்பன கூடின. இதன்போது அதிகாரிகள் இந்த விடயம் தொடர்பில் கலந்துரையாடவில்லையா? இங்கு எடுக்கப்பட்ட தீர்மானங்கள் என்ன? இது தொடர்பில் மேலிடத்திற்கு அறிவிக்கப்பட்டதா? அரசுத் தலைவர் நவம்பர் 27 அன்றே கூட்டத்தை நடத்தினார். அதுவரையில் அவருக்கு அறிவிக்கவில்லையா?

அத்துடன் இந்திய வளிமண்டலவியல் திணைக்களம் 12 மணித்தியாலத்திற்கு ஒரு தரம் என்ற ரீதியில் எமது வளிமண்டலவியல் திணைக்களத்திற்கு அறிவித்துள்ளது. இந்தியன் எக்ஸ்பிரஸ் கூறியது பொய்யென அமைச்சர் நளிந்த ஜயதிஸ்ஸ கூறினார். இந்திய எக்ஸ்பிரஸ் பொய் கூறியிருந்தால் அதனைத் திருத்தி நீங்கள் அதற்குக் கடிதம் அனுப்பினீர்களா? அவ்வாறு செய்திருந்தால் அந்தக் கடிதத்தைச் சபையில் சமர்ப்பியுங்கள். தொலைக்காட்சியில் இதனைக் கூறி பயனில்லை. அது தொடர்பில் கூறிய பதிலை சபையில் முன்வையுங்கள் என்று கோருகின்றோம். களுகங்கையில் நீந்துவதை போன்று கடலில் நீந்த முடியாது. என்பதனை புரிந்துகொள்ள வேண்டும்.

வளிமண்டலவியல் திணைக்களத்தால் கூறப்படவில்லை என்றே கூறுகின்றனர். அந்த திணைக்களம் அரசுத் தலைவருக்குக் கீழேயே இருக்கின்றது. அதற்குப் பொறுப்பான அமைச்சர் அரசுத் தலைவரே. இதனால் அரசுத் தலைவரே இதற்கான பொறுப்பை ஏற்றுக்கொள்ள வேண்டும். கெமுனுகுமார பால்சோறு சாப்பிட்ட கதை போன்றுதான் அனுரகுமாரவும் இது தொடர்பில் நடந்துகொள்கின்றார். தித்வா என்று பெயர் கூறாவிட்டாலும் சூறாவளி வரும் என்று கூறப்பட்டிருந்தது. அதனை புரிந்துகொள்ள முடியவில்லையா?

பாதிக்கப்பட்ட மக்களுக்கு நியாயம் கிடைக்க வேண்டும். பொறுப்பு கூற வேண்டியவர்கள் அடையாளம் காணப்பட வேண்டும். அதனால் இந்த விடயத்தில் யார் பொறுப்பைத் தட்டிக்கழித்து செயற்பட்டார்கள் என தெரிந்துகொள்ள தெரிவுக் குழுவை அமைக்க நடவடிக்கை எடுக்குமாறு தெரிவிக்கிறோம் - என்றார்.

# குறைநிரப்புப் பிரேரணை ஏகமதாக நிறைவேற்றம்

நாட்டில் அண்மையில் ஏற்பட்ட 'தித்வா புயல் மற்றும் வெள்ள பேரிடரால் பாதிக்கப்பட்ட மக்களின் வாழ்வாதாரத்தை மீளக்கட்டியெழுப்புவதற்கான. 500 பில்லியன் ரூபாவுக்கான குறைநிரப்பு பிரேரணை வாக்கெடுப்பின்றி ஏகமனதாக நிறைவேற்றப்பட்டது .

நாடாளுமன்றத்தில் வியாழக்கிழமை பிரதமர் ஹரிணியால் சமர்ப்பிக்கப்பட்ட இந்தப் பிரேரணை நேற்று விவாதத்திற்கு எடுப்பட்ட நிலையிலேயே வாக்கெடுப்பின்றி ஏகமனதாக நிறைவேற்றப்பட்டது .

2026 ஆம் ஆண்டுக்கான வரவு செலவுத் திட்டம் டிசம்பர் 5 நாடாளுமன்றத்தில் நிறைவேற்றப்பட்ட போதிலும், அண்மையில் ஏற்பட்ட பேரிடர் காரணமாக வரவுசெலவுத் திட்டத்தின் கீழ் அங்கீகரிக்கப்பட்ட தொகைகளுக்கு மேலதிகமாக கூடுதல் நிதியைத் திரட்டவேண்டிய கட்டாயம் ஏற்பட்டிருந்தது. இதற்கமைய பாதிக்கப்பட்ட மக்களை வலுவூட்டுவதற்கும், அத்தியாவசிய உட்கட்டமைப்பு வசதிகளை மீண்டும் கட்டியெழுப்புவதற்கும் 500 பில்லியன் ரூபாவுக்கான குறைநிரப்புப் பிரேரணை முன்மொழியப்பட்டது.

இந்தக் குறைநிரப்புத் தொகையில் 10 ஆயிரம் கோடி ரூபா பேரிடரால் சேதமடைந்த வீடுகளை மீண்டும் சீரமைப்பதற்கும், 25 ஆயிரம் கோடி ரூபா சேதமடைந்த உட்கட்டுமான வசதிகளை மீளக்கட்டியெழுப்புவதற்கும், 15 ஆயிரம் கோடி ரூபா பாதிக்கப்பட்ட மக்களின் வாழ்வாதாரத்தைக் கட்டியெழுப்புவதற்கும் பயன்படுத்தப்படவுள்ளன.

# பொலிஸாருக்கு பதவி உயர்வுகள்

பொலிஸ் சேவையில் கடமையாற்றும் 11 உதவி பொலிஸ் அத்தியட்சகர்கள், பொலிஸ் அத்தியட்சகர்களாக பதவி உயர்த்தப்பட்டுள்ளனர். தேசிய பொலிஸ் ஆணைக்குழுவின் பரிந்துரைக்கமைய மேற்படி பதவி உயர்வு வழங்கப்பட்டுள்ளதாக பொலிஸ் தலைமையகம் தெரிவித்துள்ளது. இது தொடர்பில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:

தேசிய பொலிஸ் ஆணைக்குழுவின் பரிந்துரைக்கமைய பதில் பொலிஸ்மா அதிபர் பிரியந்த வீரசூரியவினால், பொலிஸ் சேவையில் கடமையாற்றும் 11 உதவி பொலிஸ் அத்தியட்சகர்களுக்கு பொலிஸ் அத்தியட்சகர்களாக பதவி உயர்வு அளிக்கப்பட்டுள்ளது. கடந்த ஒக்டோபர் 1 முதல் அமுலுக்கு வரும் வகையில் இந்தப் பதவி உயர்வு வழங்கப்பட்டுள்ளது.

அதற்கமைய, அரச புலனாய்வுப் பிரிவு உதவி பொலிஸ் அத்தியட்சகர்களான விஜேசூரிய, குமார, செனவிரத்ன, கொழும்பு மத்திய பிரிவில் உதவி பொலிஸ் அத்தியட்சகராக கடமையாற்றும் மினுற சேனாரத்ன மற்றும் கொழும்பு மாவட்ட குற்றத்தடுப்பு பிரிவைச் சேர்ந்த உதவி பொலிஸ் அத்தியட்சகர் நிஷாந்த ஆகியோர் அப்பிரிவுக்கான பொலிஸ் அத்தியட்சகர்களாக நியமிக்கப்பட்டுள்ளனர்.

மேலும், குற்றப்புலனாய்வுத் திணைக்களம் உதவி பொலிஸ் அத்தியட்சகர்களான சேனசிங்க, குமார, அனுரங்க, வேதமுல்ல, கண்டி பிரிவு உதவி பொலிஸ் அத்தியட்சகரான ரந்திக மற்றும் நுகேகொடை பிரிவு உதவி பொலிஸ் அத்தியட்சகரான ரங்க ஆகியோருக்கும் பதவி உயர்வு வழங்கப்பட்டுள்ளது.







இந்நாளிதழ் யாழ்ப்பாணம் இல.551 A, கஸ்தூரியார் வீதியிலுள்ள Green Media House (Pvt) Ltd.நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 20.12.2025இல் வெளியிடப்பெற்றது